விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (02.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# குடாநாட்டில் ஒரே இரவில் பல இடங்களில் கிறீஸ் பதற்றம்

## மக்கள் கொந்தளிப்பு; கிறீஸ் மனிதன் தப்பியோட்டம்

## குருநகரில் மக்கள் மீது இராணுவம் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவலாக நேற்றிரவு கிறீஸ் மனிதன் எனச் சந்தேகிக்கப்படுவோர் புகுந்ததால் பதற்றம் நிலவியது. குருநகர், சுழிபுரம், சுன்னாகம், கொக்குவில் முதலி ஒழுங்கை மற்றும் கந்தர்மடம் மணல்தறை லேன் ஆகிய இடங்களிலேயே நேற்றிரவு கிறீஸ் மனிதன் புகுந்துள்ளான். இச்சம்பவத்தினையடுத்து அப்பகுதி மக்கள் கொந்தளித்த நிலையிலும் பதற்றத்திலும் காணப்பட்டனர். உடனடியாக அவ்அவ் இடங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனால் கிறீஸ் மனிதனைப் பிடிக்கும் முயற்சியை மக்கள் கைவிட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் பிடிக்கப்பட்ட மர்ம மனிதன் என சந்தேகிக்கப்படும் நபரை எதிர்வரும்15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிறிஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் ஒருவரை கோண்டாவிலில் வைத்து பொதுமக்கள் நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகனுக்கு த.தே.கூ.மனு

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியிலுள்ள படைமுகாம்களை அகற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரும் மனுவொன்றை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கையளித்துள்ளது. இந்திய நாடாளுமன்ற லோக்சபா எம்.பிகள் சிலரின் உதவியுடன் இம் மனு கையளிக்கப்பட்டதாக த.தே.கூட்டமைப்பு பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கலாநிதி மன்மோகன் சிங்கிடம் இம் மனுவை கையளிப்பதற்காக இந்தியாவின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த லோக் சபா எம்.பிகளுடன் நாம் இணைந்து செயற்பட்டோம். உயர் (20ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிங்கள முதியவர் கைது

### சுழிபுரத்தில் நேற்றிரவு சம்பவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் வறுத்தலை என்ற இடத்தில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய சிங்கள முதியவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, சுழிபுரம் வறுத்தலை பகுதியில் நேற்று மாலை சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய சுமார் 60 வயது மதிக்கத்தக்க சிங்கள வயோதிபர் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டார்.

பிரஸ்தாப வயோதிபர் தான் கம்பஹாவைச் சேர்ந்தவர் என குறிப்பிட்டுள்ளதுடன் மாறுபட்ட தகவல்களையும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரை கிராம சேவையாளர் ஊடாக வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவி திருமதி நா.ஐங்கரன் பொது மக்களுடன் கலந்துரையாடியுள்ளார். (ச-5)

## யாழ். கல்விப் பணிப்பாளராக செல்வராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக ஹாட்லி கல்லூரி அதிபர் கே.தெய்வேந்திர ராஜா நியமனம் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் தகவல்களிலிருந்து தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக வி.செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 6 வருடங்களாக வடமராட்சி கல்விப் பணிப்பாளராக கடமை (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

சீமான் எழுதும்

இருப்பாய் தமிழா நெருப்பாய்

## பெண்கள் மீது மோகம் கொண்ட மனநோயாளியே மர்ம மனிதன்

### கோண்டாவிலில் கைதானவர் குறித்து விளக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கோண்டாவில் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட மர்ம நபர் பெண்களின் மீது மோகம் கொண்ட மன நோயாளி என மருத்துவ அறிக்கை தெரிவிப்பதாக கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரும் யாழ். பதில் பொலிஸ்மா அதிபருமான நீல் தலுவத்த தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மேற்படி நபர் தீவிர பொலிஸ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர் ஒரு மன நோயாளியென தெரியவந்ததாக பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நபர் வேலைவாய்ப்பு தேடியே யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார். நேற்று வியாழக்கிழமை காலை மேற்படி நபரை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் ஏ. ஆனந்தராஜா உத்தரவு பிறப்பித்ததாகவும் குறிப்பிட்டார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் கிழக்கில் கிறீஸ் மனிதன் துரத்தியவர்களுக்கு அடி, உதை!

### பஸ் மீது கல் வீச்சு ; 6 பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு பிறவுண் வீதியில் கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்பட்ட நபர்களை பொதுமக்கள் துரத்திச் சென்றபோது ஏற்பட்ட பதற்ற நிலையால் அப்பகுதியைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டு 75 ஆயிரம் ரூபா அபராதத்துடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு இராணுவம் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட்ட இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலன் இரத்தினராசா (வயது-33), கணபதிப்பிள்ளை சுபாகரன் (வயது-28) ஆகியோர் காயமடைந்தவர்களாவர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கொக்குவில் கிழக்குபிறவுண் வீதியில் வளாக பகுதியில் (கல்வாரி கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகாமையில்) உள்ள வீடொன்றில் நேற்று கொண்டாட்டம் ஒன்று நடைபெறவிருந்தது. அக் கொண்டாட்டத்திற்கு சென்ற இளைஞர்கள் ஆடல் பாடல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அச் சந்தர்ப்பத்தில் அயலிலுள்ள கிராம மக்கள் மர்ம மனிதன் என சந்தேகிக்கப்பட்ட நபர்களை அப்பகுதியூடாக துரத்தி வந்துள்ளனர்.

அப்போது அந்தவிழாவில் கலந்து கொண்டிருந்த இளைஞர் குழுவும் மர்ம மனிதனை துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மர்ம மனிதனை மக்கள் துரத்தி சென்றபோது திடீரென அப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து சுற்றுலாக்கென யாழ்ப்பாணம் வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் பேருந்து ஒன்று அப்பகுதியில் உள்ள கல்வாரி தேவாலயத்திற்கு முன்னுள்ள வெற்றுக் காணியில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது பொதுமக்களினால் துரத்தி வரப்பட்ட மர்ம நபர்கள் பேருந்திற்குள் சென்று பதுங்கிக் கொண்டுள்ளனர் என சந்தேகித்த இளைஞர் குழு (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அநேகர் வாழ்வில் நம்பமுடியாத அதிசயங்களை வழங்கிவரும்

சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்

சங்கடங்கள் விலகுகின்றன...
துன்பங்கள் துரத்தப்படுகின்றன...
பிரச்சினைகள் பின்வாங்குகின்றன...

* செல்வம் * ஞானம் * அதிர்ஷ்டம் * புகழ் கிடைக்கிறது

விலை ரூபா 5100.00

விரைவில் அற்புதமான மாற்றங்கள் உங்கள் வாழ்வில்
அதிஷயமாக நிகழ்வதை நீங்களே உணர்வீர்கள்

உங்கள் இருப்பிடங்களுக்கு தருவிப்பதற்கு அழையுங்கள் 0771399950

(6039)

சிவமயம்
யாழ்ப்பாணம்,ஆவரங்கால்

**சிவசக்தி மணிமண்டபம்**

**8ஆவது அகவை நிறைவு அறக்கொடை விழா**

**அழைப்பு**



இடம் –: சிவசக்தி மணிமண்டபம்
காலம் –: இன்று பிற்பகல் 3 மணி

**தலைவர்**
திரு.வே. கந்தசாமி
(Retired Deputy Auditor General)

செயலாளர்,நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ,
சிவசக்தி மணிமண்டபம்,ஆவரங்கால்

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
(தமிழ்த்துறைப் பேராசிரியர்,யாழ். பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இவ்வண்ணம்.
நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினரும்
ஆலோசனைச் சபையினரும் ஊழியரும்

சிவசக்தி மணிமண்டபம்
V&T Trust ஆவரங்கால்

(6038)

## மண்டைதீவில் கொடியேற்றம்

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

நாளை காலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி பகல் 10.45 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

எதிர்வரும்11-ம் திகதி தேர்த்திருவிழாவும் 12-ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மகோற்சவத்தை சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்களும் (ஊரெழு), சிவஸ்ரீ விவஸ்வதமூர்த்திக்குருக்களும் (தாவடி) நடத்தவுள்ளனர்.(ந)

## பாம்பு தீண்டி வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்காகிய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

இதில் சங்குவேலி வடக்கைச் சேர்ந்த கனகலிங்கம் ராசாத்தியம்மா (வயது 73) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது வீட்டில் வைத்தே பாம்பு தீண்டியுள்ளது. பிரேத பரிசோதனையின் பொருட்டு சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சு-6)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

புதிய பிரிவு ஆரம்பம் : 05.09.2011 திங்கள்
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
பட்டதாரிகள் கலந்துகொள்ளலாம்
வார வகுப்பு - 1 மாதம் சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## வீடு விற்பனைக்கு

A9 வீதி அரியாலையில், 3 பரப்பு காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு/நீண்ட கால குத்தகைக்கு உண்டு.

தொடர்பு: 077513881
OR
0717937629

(6029)

## வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938

## மரண அறிவித்தல்

## சபாபதி நற்குணம்



கோம்பு, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி நற்குணம் அவர்கள் 31.08.2011 புதன் கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி-சிவப்பி தம்பதிகளின் மூத்த புதல்வரும், கிருஷ்ணலீலாவின் அன்புக் கணவரும், கோபு, பாபு, தினேஸ், ஆதவன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுணரட்ணம், மகாராணி, ரஞ்சிதமலர்(கலா) ஆகியோரின் பாசத்திற்குரிய சகோதரனும், வசந்தினி, யசோதா, ஹம்சிகா, ஆகியோரின் மதிப்பிற்குரிய மாமனாரும், மலர், மகாராஜா, யோகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும்,அஷ்வினி, ஜவீனா, றவீனா ஆகியோரின் பேரன்புக்குரிய பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 03.09.2011 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:** மனைவி: கிருஷ்ணலீலா
மகன்மார்: கோபு, பாபு, தினேஸ், ஆதவன்

(சு-4288)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1927
04
02

மறைவு
2008
09
04

ஆண்டு மூன்று ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப்பார்க்க முடிகிறதா?
துன்பக்கடலில் மூழ்கியே
துவண்டு துடிக்கிறோம்
துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழிநடத்தும்
எங்கள் அன்புத் தெய்வமே...

உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்

அமரர்
**தம்பையா நடராசா**

சிறி நதியா நகை மாளிகை

இங்ஙனம்
மகன்,மகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(சு-4286)

# இன்று ஒரு தகவல்

## ஒளிந்திருக்கும் உண்மைகள்!

ஒரு ஊரில் மிகவும் திறமைசாலியான் சிற்பி ஒருவர் இருந்தார். அவர் எங்கேயாவது ஒரு கல் கிடைத்தால் போதும். அதை அவர் எடுத்து ஒரு அழகான சிற்பத்தைச் செதுக்கிவிடுவார்.

"எப்படி... அவ்வளவு மோசமான ஒரு கல்லில் இருந்து இவ்வளவு அழகான ஒரு சிற்பத்தை உங்களால் வடிக்க முடிகிறது?" என்று கேட்டால், அதற்கு அவர், "இந்தச் சிற்பம் ஏற்கனவே, அந்தக் கல்லினுள் இருந்தது... இதைச் சுற்றியுள்ள வேண்டாத பகுதிகளையெல்லாம் உளியாலே கொத்தி எடுத்துவிட்டேன். அவ்வளவுதான் உள்ளே இருந்த சிற்பம் வெளியிலே வந்தது!" என்றார். அவர் அந்த அளவுக்குத் திறமைசாலி.

ஒரு சிறிய பாறை அல்லது கருங்கல்லைப் பார்த்தார் என்றால், அந்தக் கல்லின் அமைப்பை கவனித்து வைத்துவிட்டு "இதற்குள் ஒரு வீரன் மறைந்துள்ளான்; இந்தக் கல்லினுள் ஒரு துறவி உட்கார்ந்துள்ளார்; இந்தக் கல்லினுள் ஒரு நடமங்கை நடனம் ஆடுகிறாள்" என்பார்.

இந்தச் சிற்பிக்கு நீண்ட நாட்களாக மனதினுள் ஒரு ஆசை.

உண்மை–தூய்மை–இதற்கு உதாரணமாக இருக்கக்கூடிய புத்தர் சிலையை வடிக்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறாமலே இருந்தது. அதற்கான காரணம் தகுந்த மாதிரி ஒரு கல் சிற்பிக்கு கிடைக்கவில்லை.

நீண்ட காலமாக தேடி அலைந்தார். தனது கண்ணிற்குப் புலப்படும் கற்களையெல்லாம் உடைத்துப் புத்தர் இருக்கிறாரா என்று கவனிப்பார். அவ்வுருவம் இருப்பதுபோல் எதுவும் தென்படுவதில்லை.

சரி... இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

ஒரு புத்த மடாலயத்துக்குச் சென்றார். அங்கே இருந்த ஒரு புத்த துறவியைச் சந்தித்து அவரிடம் விசாரித்தார்.

"சுவாமி... புத்தரின் தூய்மை ஒளிந்திருக்கும் கல் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டார்.

"அந்தக் கல் இருக்கிற இடம் இன்னமும் உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று துறவி கேட்டார்.

"இல்லை" என்று பதிலளித்தார்.

"சரி... கவலைப்படவேண்டாம். என்னுடன் வாருங்கள்... காட்டுகிறேன்" என்று அழைத்துக் கொண்டு மடாலயத்தின் பின்பக்கமாக இரண்டு பேரும் சென்றார்கள்.

அங்கே ஒரு கிணறு இருந்தது. அதை எட்டிப் பார்க்கும் படியாக துறவி கூறினார்.

எட்டிப்பார்த்தார் சிற்பி.

தன்னுடைய உருவம்தான் அந்தத் தண்ணீரில் தெரிந்தது.

இப்போது அந்த புத்த ஞானி கூறினார்... துறவி யாரே... புத்தரை நாங்கள் தான் ஒளித்து வைத்து இருக்கிறோம். எமக்குள்ளே தான் அவர் மறைந்து இருக்கிறார். அவரை அடையாளம் தெரியாதபடி மூடியிருக்கிறது எங்களிடம் இருக்கிற கோபம், போலித்தனம், பதற்றம், ஆசை... இவைதான்.

அறிவு என்ற உளி செதுக்கி எடுத்தால்... அந்த அழகான புத்தர் வெளியில் வருவார்" என்றார்.

ஒரு தந்தை தனது பிள்ளைக்குப் புத்தி கூறினார். "இதோ பார் மகனே... மனம்தான் கல். அறிவுதான் உளி.

உன்னுடைய "மனம்" என்ற கல்லை... "அறிவு" என்ற உளியாலே செதுக்கி அழகான மனிதனாக நீ வெளியில் வரவேண்டும்" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தமிழகத்திலிருந்து அகதிகளை இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ் நாட்டில் உள்ள சுமார் 31 முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த சென்ற பல்லாயிரக்கணக்கான மக்களை மீண்டும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வந்து மீள்குடியேற்றுவதற்காக பூர்வாங்க நடவடிக்கைகளை மீள்குடியேற்ற அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இப்போது யுத்தம் முடிவடைந்து நாட்டில் மீண்டும் அமைதியும் சமாதானமும் திரும்பிக் கொண்டிருப்பதனால் அவர்கள் இலங்கை திரும்பி தங்கள் உறவுகளுடன் ஒன்றிணைந்து வாழ இப்போது அதிக ஆர்வம் கொண்டுள்ளனர்.

தமிழ் நாட்டு முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் இங்கு அழைத்து வருவதற்கான ஒழுங்குகளை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உத்பல பஸ்நாயக்க புதுடில்லியிலுள்ள இலங்கை அமைச்சின் செயலாளர் எத்பல பஸ்நாயக்க புதுடில்லியிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக ஒழுங்கு செய்து வருகின்றார்.

இந்த மக்கள் இலங்கை திரும்புவதற்குத் தேவையான ஆவணங்களை அவர்களுக்குத் தயார்ப்படுத்திக் கொடுத்த அவர்களை மீண்டும் நாடு திரும்புவதற்கான வசதிகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவர்களுக்கு உடனடியாக இலங்கை திரும்புவதற்கான கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சோரன்பற்றில் புதிதாக 50 வீடுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சோரன்பற்று கிராம சேவையாளர் பிரிவில் இந்திய அரசின் நிதியுதவியுடன் புதிதாக 50 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீடுகள் நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதோடு இப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் காணியற்று இருக்கும் 50 குடும்பங்களுக்கே இவ்வீடுகள் வழங்கப்படவுள்ளது.

மேற்குறித்த கிராம மக்கள் காணிகள் இன்றி இருந்தமையால் இவ்வீட்டுத்திட்டமானது வேறு இடத்திற்கு மாற்றப்பட இருந்தது. யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழு பிரதித் தலைவரும் பச்சிலைப்பள்ளி ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான மு.சந்திரகுமாரின் முயற்சியால் காணிகள் பெறப்பட்டு வழங்கப்பட்டதையடுத்தே இவ்வீட்டுத்திட்ட வேலைகள் நடைபெற்று வருகிறது.

இவ் நிர்மாண வேலைகள் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் இடம் பெற்று வருவதோடு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீடுகள் ஏ9 வீதியில் அமைக்கப்படுவதால் அக்கிராமம் புதிய மாதிரிக் கிராமமாக காட்சியளிப்பதை அவதானிக்க முடிகிறது. (ஸ்ரீ-3)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 70 |
| தக்காளி | 35 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 50 | 45 |
| கோவா | 30 | 60 | 30 |
| கரட் | 50 | 80 | 30 |
| பூசணி | 25 | 35 | 25 |
| புடோல் | 30 | 60 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 85 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 120 | 120 | 90 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 30 | 30 |
| கறிமிளகாய் | 40 | 40 | 35 |
| முருங்கைக்காய் | 90 | 160 | 90 |
| போஞ்சி | -- | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 70 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 110 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

02.09.2011
(ஆவணி 16, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 9.43 மணிவரை
சித்திரை காலை 7.01 மணிவரை
சுவாதி பின்னிரவு 5.26 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
ரிஷி பஞ்சமி

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்துசேருவர், பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், தொழிலில் முன்னேற்றகரமான சம்பவங்கள் ஏற்படலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், காரிய சித்தியுண்டு.

**மிதுனம்** உங்கள் முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திப்பீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்** எண்ணிய கருமங்கள் நிறைவேறும் நாள், புதிய முதலீடுகள் செய்வதற்கான திட்டங்கள் மனதில் தோன்றும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**சிங்கம்** நண்பர்கள் சொல்லும் ஆலோசனைகள் உங்களுக்கு நல்லதாகத் தெரியும், சுபசெய்திகள் வீடு வந்து சேரும் நாள், இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தனவரவைப் பெருக்க தகுந்த முயற்சிகள் செய்வீர்கள், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபடவேண்டியநாள், குடும்ப ஒற்றுமை பலப்படும், கற்பனைகள் அதிகரிக்கும், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கைகூடும், தொழில் ரீதியாக எடுத்த புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பால் மகிழும் நாள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், மற்றவர்கள் நம்பி கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற இயலும்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள், மற்றவரிடம் ஒப்படைத்த பொறுப்பு உங்களிடமே வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனமெடுப்பீர்கள்.

**கும்பம்** குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மீனம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிக்கல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, மனச்சஞ்சலமான நாள்.

வளவன்

# இந்துமயானத்தை திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆவரங்கால் கிழக்கில் அமைந்துள்ள இந்து மயானம் திருத்தப்படாது கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.

அத்துடன் தகனக்கிரியைகளுக்காக வருவோர் நிற்கும் கொட்டகையின் தகரங்கள், இரும்புத் தூண்கள் என்பன திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இதனால் மழைக்காலங்களிலும் வெயில் காலங்களிலும் தகனக்கிரியைகளுக்காக வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு இம்மயானத்தை திருத்தித் தருமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். ஸ்ரீ (ஸ்ரீ-12-134)

# இரு குழுக்களுக்கு இடையிலான கோஷ்டி மோதலில் 4 பேர் காயம்

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற கோஷ்டி மோதலில் 4 பேர் காயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தொண்டைமானாறு பகுதியில் கடந்த 30 ஆம் திகதி இரவு 7 மணியளவில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்களுக்கிடையே இடம்பெற்ற வாய்த் தகராறு கடைசியில் கூரிய ஆயுதங்களினால் சண்டையிடும் அளவிற்கு இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த செந்தூரன் (வயது 21) என்ற இளைஞன் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அதனையடுத்து மறுநாள் காலை அதே இடத்தில் அக்குழுக்களுக்கிடையே மீண்டும் இடம்பெற்ற தகராறில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் நவநீதன் (வயது 19), சுஜீவன் (வயது 19), சாந்தன் (வயது 18) ஆகியவர்களே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது. (ஸ்ரீ-12-52)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரி பிள்ளையார் கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு நாட்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஸ்ரீ)

## சாதாரணதர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(சாவகச்சேரி)

இவ்வாண்டு க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இன்று தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மீசாலை உயர்கலைக்கல்லூரியில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் மீசாலை உயர்கலைக்கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-12-29)

# சாட்டி அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் செய்ய வருவோருக்கு உரிய வசதிகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சாட்டி வெள்ளைக் கடற்கரை இந்து மயான அந்தியேட்டி மட பரிபாலன சபை, சாட்டி அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டி கிரியைகளைச் செய்கின்றவர்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுத்து வருகின்றது.

இப் பரிபாலன சபை தற்போது கிரியைகளுக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. அத்தோடு உபகரணங்களுக்கான கொடுப்பனவாக 250 ரூபாய் அறவிடப்பட்டுகின்றது.

இங்கு அந்தியேட்டி செய்ய விரும்புவோர் மூன்று நாட்களுக்கு முன்பாக வேலணை பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென வேலணை பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-12)

## கொடியேற்றம்

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினை மத்தி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவில் திருக் கொடியேற்றப் பெருவிழா இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை 8 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஸ்ரீ-12-78)

## யாழ்.செய்திகள்

# 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது உள்ள வீதி

## பொதுமக்கள் சௌகரியம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் மேற்கு சிவன் வீதியையும் நல்லியோடை வீதியையும் இணைக்கும் பாடசாலை வீதி 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைகாலங்களீல் இவ்வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் பொது மக்களும் பாடசாலை மாணவர்களும் இவ்வீதியால் செல்வதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-12-70)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்திதி ஆலய உற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம் மண்டபத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று காலை 10 மணிக்கு **செஞ்சொற்புனை மாலை** எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு **வல்லிபிரான்** எனும் தலைப்பில் வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு **துணை** எனும் தலைப்பில் யா/அராலி இந்துக் கல்லூரி ஆசிரியர் க.கயிலநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஸ்ரீ-12-35)

⇦ ⇦ ⇦ ⇦ ⇦ ⇦

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை **மகாபாரதம்** என்னும் தலைப்பில் பண்டிதர் பொன் சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-12-35)

# வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சிறுகதைப் பயிலரங்கு

வலி.கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சிறுகதைப் பயிலரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாயில் உள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலரும் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமாகிய மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இப் பயிலரங்கில் தொடக்கவுரையை வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் உப தலைவர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார்.

தமிழில் சிறுகதையின் அமைப்பும் உள்ளடக்கமும் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணியும் ஜெயகாந்தனின் யுகசந்தி– ஒரு பார்வை என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் கருத்துரை வழங்குவர்.

நிகழ்வில் அன்றைய தினம் பங்கேற்றுப் பயன்பெறும் பயிலுநர்கள் ஆக்கும் சிறுகதைகளை எழுத்தாளர் தாட்சாயினியும் மூத்த எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் மதிப்பிட்டுக் கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

சிறுகதை தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் இப்பயிலரங்கில் கலந்து கொள்ளலாம் என வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவின் பிரஜைகளுக்கான பொலிஸ் சேவை பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறவிருப்பதால் அச்சுவேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-12-134)

## சமூக திணைக்கள பணிப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக திணைக்கள பணிப்பாளராக திருமதி நளாயினி இன்பராஜ் வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று முதல் தனது பணியினை பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்கு முன்பு வடமாகாண சமூக திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றிய கே.சிவகரன் வடமாகாண கைத்தொழில் திணைக்கள பணிப்பாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளமையையடுத்து இவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டது. (ஸ்ரீ-12)





வடமாகாண வலயக் கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:–என்.குமார்.)

# இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவிற்கு சிங்கள ஊடகம் பாராட்டு

(கொழும்பு)

கச்சதீவானது இலங்கைக்கு சொந்தமானது என்றும் இத்தீவில் மீன்பிடிப்பதற்கான உரிமை இந்திய மீனவர்களுக்கு இல்லை எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்த மறுநாள் இந்த அறிக்கை தொடர்பாக சிங்கள் ஊடகம் ஒன்று கிருஷ்ணாவைப் பாராட்டியுள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள பத்திரிகையான லங்காதீப வில் கச்சதீவானது இலங்கைக்குச் சொந்தமானது என மீண்டும் உறுதிப்படுத்தியமைக்காக இந்தியாவிற்கு பாராட்டுதலைத் தெரிவிப்போம் என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

இவ்வாறானதொரு இராஜதந்திர ரீதியானதொரு கூற்றை வெளியிட்டமைக்காக இலங்கை தனது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் இந்திய அமைச்சருக்கு வழங்க வேண்டும் எனவும் இத்தலையங்கத்தில் வலியுறுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

1974, 1976 களில் மேற்கொள்ளப்பட்ட இந்தோ-இலங்கை உடன்படிக்கைகள் தொடர்பாக இந்தியாவின் மக்களவையில் மேற்கொள்ளப்பட்ட விவாதத்தின் போது கச்சதீவானது இலங்கைக்கு சொந்தமான கடல் எல்லையில் அமைந்துள்ளது என அமைச்சர் கிருஷ்ணா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் ஓய்விற்காகவும் தமது மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்காகவும் ஆண்டுதோறும் இடம்பெறும் புனித அந்தோனியார் விழாவில் கலந்து கொள்வதற்காக மட்டுமே கச்சதீவிற்கு செல்ல முடியும். மாறாக அத்தீவில் மீன்பிடியில் ஈடுபட முடியாது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியானது தனது தென்புறத்து அயல் நாட்டுடன் எவ்வாறான நட்புறவைக் கட்டியெழுப்ப முற்படுகின்றது என்பதற்கான எடுத்துக்காட்டாகவே கச்சதீவு தொடர்பாக கிருஸ்ணாவால் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அமைந்துள்ளது என லங்காதீப சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு நட்பார்ந்த ரீதியான சமிக்ஞைகளுக்கு இலங்கை தலைவர்கள் மதிப்பளித்து அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது என லங்காதீப மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# மாவட்ட மட்ட இளைஞர் விருதுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் 2011 ஆம் ஆண்டிற்கான மாவட்டமட்ட இளைஞர் விருதுப்போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான போட்டி அழைப்பிதழ் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டிக்கு விண்ணப்பித்து போட்டி அழைப்பிதழ் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாக பங்குபற்ற முடியும் என யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இயக்குநர் ரி.ஈஸ் வரராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள்குடியேறிய 450 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சி, கோயில் வயல், முகாவில் ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 450 குடும்பங்களுக்கு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறித்த கிராமங்களில் மீளக்குடியமர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாதுள்ள குடும்பங்களுக்கே இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் இயக்கச்சி கிராமத்தில் காணியற்று வீட்டுத் திட்டத்தைப் பெறமுடியாமல் இருந்த 49 குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுப்பிரதித் தலைவரும் பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் மு.சந்திரகுமாரின் முயற்சியால் தனியார் ஒருவரின் 15 ஏக்கர் காணி இலவசமாக பெறப்பட்டு இவர்களுக்கு வழங்கப்பட்டு அதில் வீட்டுத் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏனைய கிராமங்களான கோயில் வயல், முகாவில் ஆகியவற்றில் காணி உள்ளவர்களுக்கு அவர்களது சொந்தக் காணிகளிலும் பொருத்தமான அரச காணிகள் காணப்படும் இடத்து அங்கேயும் வீட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த மக்கள் வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

# கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் உயிரிழப்பு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய,கெட்டகல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30மணி அளவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வீட்டுக்குள் நுழைந்த மூன்று பேர் அங்கிருந்தவர்களை கயிற்றினால் கட்டிவிட்டு தங்காபரணங்களை கொள்ளையிட்டதோடு வீட்டின் உரிமையாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 45 வயதான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# இயக்கச்சியிலுள்ள 20 குடும்பங்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி கிராமத்திலுள்ள 20 குடும்பங்களுக்கு கடந்த 29 ஆம் திகதி யாழ்.மாவட்ட பாரர்ளுமன்ற உறுப்பினர் எம்.பி.மு. சந்திரகுமாரால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

இவ் உதவி வாழ்வாதாரத்தில் பின்தங்கிய வறுமைக் கோட்டின் கீழுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்குமே வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ரி.முகுந்தன்,சோஆ நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் : 05.09.2011 திங்கள்
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் பட்டதாரிகள் கலந்துகொள்ளலாம்
வார வகுப்பு - 1 மாதம் சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
11.03.1942
உதிர்வு
03.08.2011
அமரர் சிங்கராஜர் அருளம்மா

அம்மா நாங்கள் தனித்துப் போனோம்
உன் பிரிவால்
நாங்கள் எண்ணித் துவண்டு போனோம்
நெஞ்சு பதைக்க
கதறி அழுகிறோம் கண்ணீர்த் துளியாய்
உனக்கு மாலை தொடுக்க

உன் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்.
உயிரோவியன் (விசி ஆட்ஸ்)
அன்ரன், இதயா, பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

புலோப்பளை மேற்கு,
பளை.


(சி/4279)

NIBM
BUILDING COMPETENCIES
அரச சான்றிதழுடனான
கணினி
முகாமைத்துவ
ஆங்கில
சிங்கள
கற்கை நெறிகள்
அடுத்த பிரிவுகள் ஆரம்பம் 11.09.2011
After A/L
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்ற
தேசிய வியாபார முகாமை நிறுவனம்
077 071 6974
021 222 0360
இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.



© NISA Arts 0773 849808 www.nisagraphics.com

# ஜிமெயிலின் முன்தோற்றம்




கடந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதியன்று கூகுள் அனைவரும் விரும்பும் ஒரு சிறப்பான வசதியைத் தன் ஜிமெயில் தளத்தில் தந்துள்ளது. பொதுவாக நமக்கு வந்துள்ள மெயில்களைப் பார்க்கையில், அனுப்பியவர் பெயர், திகதி மற்றும் நேரம், மெயிலின் தொடக்க சொற்கள் காட்டப்படும். இதனால், நாம் உடனே பார்க்க விரும்பும் மெயில்களுக்கு முன்னுரிமை கொடுத்து கிளிக் செய்து பார்க்கலாம். இதனால் இன்பொக்ஸில் ஒவ்வொரு மெயிலாகக் கிளிக் செய்து அலைய வேண்டியதில்லை. அஞ்சலைத் திறக்காமலேயே, அதனைப் பார்க்கும் சந்தர்ப்பத்தினை இந்தப் புதிய வசதி தருகிறது.

மைக்ரோசொப்ட் அவுட்லுக் மற்றும் வெப் இமெயில் கிளையண்ட் புரோகிராம்களான யாஹூ மற்றும் ஹொட் மெயில் ஆகியவை மெயில் தளத்தில் மூன்று பிரிவுகளைக் காட்டுகின்றன. இடதுபுற பிரிவில் போல்டர்கள்,மின்னஞ்சல் செய்திகள் நடுவில் மற்றும் அஞ்சல்களைப் படித்துப் பார்க்க வலது ஓரத்தில் ஒரு பிரிவு எனக் கொண்டுள்ளன. இந்த மூன்றாவது பிரிவினை, நீங்கள் விரும்பினால், செய்திகளுக்குக் கீழாகவும் வைத்துக் கொள்ளலாம்.

இந்த வாசிக்கும் பிரிவு (reading pane) நமக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாகும். இதன் மூலம் வெகு வேகமாக நமக்கு வந்துள்ள அஞ்சல் செய்திகளை, அவற்றைத் திறக்காமலேயே பார்த்து நேரத்தை மிச்சப்படுத்தலாம்.

இதனை ஜிமெயில் இப்போதுதான் சேர்த்துள்ளது. இதனை இயக்க ஜிமெயில் எக்கவுண்ட் திறந்து ஜிமெயில் லப்ஸ் செல்லவும். அங்குள்ள சேர்ச் கட்டத்தில் Preview Pane என டைப் செய்தால், உங்களுக்குத் திரையில் அந்தப் பிரிவு காட்டப்படும். இதனை முதலில் Enable செய்திட வேண்டும்.

பின்னர், இது எந்தப் பக்கத்தில், இடது/வலது, இருக்க வேண்டும் என்பதனை முடிவு செய்திடலாம். அல்லது இன்பொக்ஸுக்குக் கீழாகக் கூட இருக்கும் படி செட் செய்திடலாம். இத்துடன் ஒரு மின்னஞ்சல் செய்தியினை அதிக பட்சம் எத்தனை விநாடிகள் பார்க்க விருப்பம் என்பதனையும் செட் செய்திடலாம். மாறா நிலையில் இது மூன்று விநாடிகள் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு செட் செய்து ஜிமெயில் இன்பொக்ஸ் சென்றவுடன் முன் தோற்றப் பிரிவு காட்டப்படும் என எண்ண வேண்டாம்.

ஏற்கனவே உள்ள பிரிவுகள் மறைக்கப்பட்டு விடுமே என அஞ்ச வேண்டாம். நீங்கள் விரும்பினால் மட்டுமே காட்டப்படும். இன்பொக்ஸ் வலது மேல் மூலையில், ஒரு பட்டன் காட்டப்படுகிறது. இதில் கிளிக் செய்தால், பல விருப்பங்கள் காட்டப்படுகின்றன. வழக்கமான லேஅவுட் அல்லது இந்த முன் தோற்றலே அவுட் இவற்றில் எதனை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். வழக்கமான லேஅவுட்டைத் தேர்ந்தெடுத்தால் பழையபடி தோற்றம் நமக்குக் கிடைக்கும்.


திரைக்குக் குறுக்காக அல்லது நெட்டுத் தோற்றம் என எந்த வகையில் இது காட்டப்பட வேண்டும் என்பதனைத் தேர்வு செய்து, கிளிக் செய்து அமைக்கலாம். பிரிவின் அகலத்தையும் விரித்து குறைத்து அமைக்கலாம்.

பிரிவு ஏற்படுத்தப்பட்டுப் பார்த்த பின்னர், இதே பட்டனை அழுத்தி No Split என்ற பிரிவைத் தேர்ந்தெடுத்தால் இந்தப் பிரிவு மறைந்திடும். இந்த முன்தோற்றக் காட்சி இதுவரை ஜிமெயிலில் இல்லாத ஒன்றை இப்போது தந்துள்ளது.




# இன்டர்நெட் போதை

சிகரெட், மது போல இன்டர்நெட்டும் ஒரு போதை என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஒருநாள் இன்டர்நெட் இணைப்பு இல்லாமல், அதனைப் பார்க்க முடியவில்லை என்றால், என்ன பதை பதைப்பு ஏற்படுகிறது. மெயில் பார்க்க முடியவில்லை. என் பேஸ்புக் நண்பர்களுடன் செய்தி பரிமாற முடியவில்லை என்று அத்தனை பேரும் பதற்றம் அடைகின்றனர். பித்துப் பிடித்தவர் போல மாறுகின்றனர்.



இங்கிலாந்தில் 18 முதல் 65 வயது வரை உள்ள ஆயிரம் பேரை இது குறித்து கருத்து கேட்ட போது,


சிகரெட்டுக்கு எப்படி, அதனைப் பயன்படுத்துபவர்கள் அடிமையாகினார்களோ, அதே போலத்தான் இன்டர்நெட்டுக்கும் என கருத்து தெரிவித்துள்ளனர். இன்டர் நெட் இணைப்பு இல்லை என்றால், ஒருவர் அது என்ஒருகையை வெட்டியது போல இருக்கும் என்றார்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பேஸ்புக், டுவிட்டர், மெயில் ஆகியன வற்றின்தொடர்புகிடைக்காமல் போவதே இந்த மனநிலைக்குக் காரணம் என்று தெரிவித்துள்ளனர். இரவு படுக்கப் போகும்போது பேஸ்புக், டுவிட்டர் அப்டேட் செய்து படுக்கைக்குச் செல்வதைப் பழக்கமாக பலர் கொண்டுள்ளனர். எனவே இது தடைப்படுகையில், தூக்கம் வராமல் தவிக்கின்றனர்.

ஆனால், இந்த கணக்கெடுப்பில் 21 வீதம் பேர், இன்டர்நெட் இல்லை என்றால், ஆஹா! இன்று விடுதலை சுதந்திரமாக இருப்பேன் என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# விண்டோஸ் 8 சோதனைப் பதிப்பு

இன்னும் சில மாதங்களில் விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் சோதனைப் பதிப்பு வர இருக்கிறது. இந்தத் தகவலை மைக்ரோ சொப்ட் நிறுவனத் தலைவர் ஸ்டீபன் சினோ ப்ஸ்கி புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒரு வலைமனையில் (http:// blogs.msdn. com/b/b8/ archive/2011/08/15/welcometobuildingwindows8. aspx) தெரிவித்துள்ளார்.




மைக்ரோசொப்ட் நிறுவன சோதனைப் பதிப்புக்களைப் பயன்படுத்தும் பயனாளர்கள், நிறுவனங்கள், சொப்ட்வெயார் புரோகிராம் தயாரிப்பவர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள, மைக்ரோசொப்ட் விரும்புவதால், அந்த வலைமனையைத் தொடங்கியுள்ளதாகவும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை, விண்டோஸ் 8 பதிப்பு முழுவதுமான புத்துணர்ச்சியுடன் காட்டும் நிறைய புதிய விடங்கள் அதில் தரப்பட்டுள்ளன. இந்தப் பதிப்பில் மட்டுமே காணப்படும் வசதிகள் பல இதில் அடங்கியுள்ளன. எனவே இவற்றை அறிவிப்பு செய்திட இன்னும் சில நாட்களில் விவரங்கள் வெளியிடப்படும் என்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படை இயக்க விடயங்கள் முதல் யூசர் இன்டர்பேஸ் வரையிலான பல தகவல்கள் தரப்பட இருக்கின்றன.

இப்போதைக்கு ஒன்று மட்டும் மிகப் பலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை இயக்கும் கணனிகள் அனைத்தும், விண்டோஸ் 8 சிஸ்டத்தையும் இயக்க முடியும். எந்தவிதமான ஹார்ட்வெயர் மேம்பாடு தேவைப்படாது.

கடந்த மே மாதத்தில், மைக்ரோசொப்ட் ஸ்டீவ் போல்மர், வரும் 2012 இல் உறுதியாக விண்டோஸ் 8 வரும் எனத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர், அது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்பதால், இந்த புதிய வலைமனையும் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

# மறைந்துவிடுமா பேர்சனல் கணனி?

கடந்த ஓகஸ்ட் 12 இல் தன் முப்பது வயதை எட்டிய பேர்சனல் கணனி வரும் காலத்தில்இல்லாமல் போய்விடும் என்று பலரும் எண்ணத் தொடங்கியுள்ளனர். 1981 ஆம் ஆண்டில் ஐ.பி.எம்.பேர்சனல் கணனியை வடிவமைத்த குழுவில் இடம் பெற்ற வல்லுநர் மார்த் டீன் இந்தக் கருத்தினை முன்வைத்துள்ளார். இன்னும் புதியதாக ஒரு தொழில்நுட்பம் பெர பேர்சனல் கணனியின் இடத்தைப் பிடிக்கும் என்று அறிவித்துள்ளார்.

ஸ்மார்ட் போன்கள் மற்றும் டேப்ளட் பேர்சனல் கணனிகள் இதன் இடத்தை பிடிக்கும் வாய்ப்புக்களைப் பெற்றவையாக இருந்தாலும் புதிய வழிகளில் கணிப்பொறி செயற்பாடு திருப்பப்பட்டு புதிய சாதனங்கள் வடிவமைக்கப்படலாம் என இவர் கணித்துள்ளார்.

கணனியில் தற்போது மேற்கொள்ளப்படும் பணிகள், இனி பேர்சனல் கணனியைப் போன்ற ஒரு சாதனத்தின் வழி மட்டும் முடங்காது அனைத்து டிஜிட்டல் சாதனங்களிலும் மேற்கொள்ளப்படும். அப்போது பேர்சனல் கணனி என்ற ஒரு தனி சாதனம் இருக்காது என்கிறார் இவர்.

இன்றைய பேர்சனல் கணனி மறைவதற்கு இவர் கூறும் இன் னொரு காரணம்.சரியாகவே உள்ளது. இப்போது கணினிப் பொறியில் மேற்கொள்ளப்படும் வேலைகளெல்லாம் இணையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. வேகமாகப் பரவி வரும் கிளவ்ட் கணனி இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு. பைல்கள் உருவாக்கப்படுவதும் சேமிக்கப்படுவதும் பகிர்ந்தளிக்கப்படுவதும் தகவல்கள் சேமிக்கப்பட்டு தேடப்பட்டு பயன்படுத்தப்படுவதும் இப்போது இணையத்திலேதான் நடக்கிறது. பேர்சனல் கணனியில் இதனை மேற்கொள்ள வழி தரும் ஒரு சாதகமாகத்தான் உள்ளது. நம் பேர்சனல் கணனியில் கணிக்கும் பணியினைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு வருகிறோம். எனவே நாம் இது வரை மேற்கொண்ட வேலைகள், பயன்பாடுகளைக் கொண்ட பேர்சனல் கணனி இனி காணாமல் போய் விடும் என்கிறார் மார்க்டீன். இந்தக் கருத்து சரியானதாகவே தோன்றுகிறது.



ஆனால், மைக்கிரோசொப்ட் நிறுவனம் இதனை மறுத்துள்ளது. இது குறித்து உயர்நிலை நிர்வாக வல்லுநர் கருத்து தெரிவிக்கையில், இந்த ஆண்டு 40 கோடி கணனிகள் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. எனவே பேர்சனல் கணனிக்கும் பிந்தைய காலம் என்று குறிப்பிடுவது தவறு. பேர்சனல் கணனியுடன் இணைந்த காலம் என்று தான் புதிய சாதனங்களைச் சொல்ல வேண்டும். இனி வரும் காலங்களில் பேர்சனல் கணனி (அல்லது மேக் கணனி) இல்லாத ஒரு வீடு இருக்கவே இருக்காது என அடித்துச் சொல்கிறார்..இதுவும் சரியென்றே படுகிறது. இருப்பினும் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் எது வேண்டுமானா லும் நடைபெறலாம்.

# அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியுள்ளோரை மலேசியாவுக்கு அனுப்புவதற்குத் தடை

## அவுஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பு

அவுஸ்திரேலியாவுக்கு புகலிடங்கோரி வந்தவர்களை மலேசியாவிலுள்ள தடுப்பு நிலையங்களுக்கு மாற்றும் அரசாங்கத்தின் திட்டம் சட்டவிரோதமானது என அந்த நாட்டு உயர்நீதின்றம் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மலேசியாவுடன் அவுஸ்திரேலியா செய்து கொண்ட புகலிடக்கோரிக்கையாளர்களை பரிமாறிக் கொள்ளும் உடன்படிக்கையானது அவுஸ்திரேலியா தனது 800 புகலிடக் கோரிக்கையாளர்களை மலேசியாவுக்கு அனுப்பி வைத்து அதற்குப் பதிலாக மலேசியாவிலிருந்து 4 வருட காலத்திற்கு 4 ஆயிரம் அகதிகளை ஏற்றுக்கொள்வதை வலியுறுத்துகிறது. ஆனால், அவுஸ்திரேலிய நீதிமன்றம் மலேசிய அகதிகளுக்கு சட்டப் பிரகாரம் சரியான பாதுகாப்பை வழங்கக்கூடிய நாடல்ல எனத் தெரிவித்து மேற்படி உடன்படிக்கையை நிராகரித்துள்ளது.

இந்த நீதிமன்றத் தீர்ப்பானது அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு பாரிய அடியொன்றாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது.

இத்தீர்ப்பு தொடர்பில் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் விபரிக்கையில், தாம் இத்தீர்ப்பால் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் உயர்நீதிமன்றத்தால் எடுக்கப்பட தீர்மானம் முழுமையாக ஏமாற்றம் தரக்கூடிய ஒன்றாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆட்கடத்தலை ஒரு வாணிபமாக மேற்கொள்பவர்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும் எமது முயற்சிகளுக்கு இந்தத் தீர்ப்பு பாரிய அடியாக உள்ளது என கிறிஸ் போவன் கூறினார்.

இத்தீர்ப்பு குறித்து அகதிகளுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் இந்து சமுத்திர தீவான கிறிஸ்மஸ் தீவிலுள்ள அவுஸ்திரேலிய தடுப்பு நிலையத்திலுள்ள புகலிடக்கோரிக்கையாளர்கள் மேற்படி தீர்ப்பு தொடர்பில் கேள்விப்பட்டதும் கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரதமர் ஜூலியா கில்லார்டின் தொழிற்கட்சி அரசாங்க புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பில் மிகவும் மென்மையாக நடந்து கொள்வதாக நாட்டு மக்கள் மத்தியில் கண்ணோட்டம் ஏற்படுவதை தவிர்ப்பதையும் அவுஸ்ரேலியாவுக்கு புகலிடங்கோரி வருபவர்களையும் ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களை தடுப்பதையும் மலேசியாவுக்கு அகதிகளை அனுப்பும் திட்டம் நோக்காகக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு முறையற்ற விதத்தில் வந்த 800 புகலிடக்கோரிக்கையாளர்களை அவர்களது அகதிகள் தகுதி நிலை பரிசீலிக்கப்படும் வரை மலேசியாவுக்கு இடமாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

அவர்கள் மலேசியாவில் ஏற்கனவே அகதிகள் அந்தஸ்து பரிசீலிக்கப்படும் வரை காத்திருக்கும் பெருந்தொகையானோர்களுடன் இணைத்துக் கொள்ளப்படவிருந்தனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த புகலிடக்கோரிக்கையாளர்களுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் மலேசியாவானது ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையத்தின் உடன்படிக்கையில் கைச்சாத்திடாத நாடாக உள்ளதால் அந்நாட்டிற்கு புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்புவது சட்ட விரோதமானது என வாதிட்டனர்.

இதனையடுத்து இந்த உடன்படிக்கை மூலம் அவுஸ்திரேலியா தனது சர்வதேச கடப்பாடுகளை மீற நேரிடும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரி வந்தவர்களை அவர்களது புகலிடக்கோரிக்கை பரிசீலனைக்கு உட்படுத்தப்படாத நிலையில் அந்நாட்டிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவனுக்கு கிடையாது எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதேவேளை மனித உரிமைகளுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக இதனைக் கருத முடியும் என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்கு செல்லத்தடை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் கடல் பகுதியில் பலத்த காற்று வீசுவதால் மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்டது.

பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் தொடர்ந்தும் வீசும் பலத்த காற்றால் இராமேஸ்வரம் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது.

இதனால் மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. இதனால் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபும் மற்றும் தனுஷ்கோடி கடல்பகுதியில் படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளது. நாளை சனிக்கிழமை தான் படகுகள் கடலுக்கு செல்லும் நாள் என்பதால் ரம்ழான் மற்றும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பெரும்பாலான மீனவர்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர். இதனால் கடற்கரையில் மீன் கம்பெனிகள் மூடப்பட்டு வெறிச்சோடி காணப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மர்ம மனிதர்கள் விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

மர்ம மனிதர்களின் விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இதற்கான ஒத்திவைப்பு பிரேரணையினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி முன்வைத்துள்ளார். இதற்கு சபாநாயகரும் அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறை உட்பட வடக்கு-கிழக்கில் மர்ம மனிதர்களின் செயற்பாடுகள் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வருகின்றன.

இது குறித்து உரிய விவாதம் நடத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்து 8 ஆம் திகதி ஒரு மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய ஔடத சட்டத்தை மீறிய 189 மருந்தகங்கள் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தேசிய ஔடதங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் சட்டத்தை மீறும் வகையில் மக்களுக்கு மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்தகங்களை சுற்றி வளைப்பதற்கான நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய ஔடதங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் அதிகார சபை இந்த சுற்றிவளைப்புகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது 189 மருந்தகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை, அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாமை, வைத்தியர்களின் பரிந்துரைகள் இன்றி மருந்து விநியோகிக்கப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனைத் தவிர உரிய வெப்பநிலையின் கீழ் ஊசி மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படாமை மற்றும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படும் போது மருந்தாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமை ஆகிய விடயங்களுக்கு அமைவாகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கின்றார்

## ராஜீவ விஜேசிங்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி செய்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சில தரப்பினர் சிங்களத் தலைவராக அடையாளப்படுத்திய போதிலும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவர் முயற்சி எடுத்து வருகின்றார்.

அதன் ஓர் கட்டமாக தமிழ்மொழியை ஜனாதிபதி பயின்று வருகின்றார் என அவர் தெரிவித்துள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான முறையில் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என இரண்டு வழிமுறைகளில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கப்படுகிறது.

குரோத உணர்வுடனோ பழி வாங்கும் உணர்வுடனோ பிரச்சினைகளை அணுகக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை இந்திய மற்றும் தமிழக அரசாங்கங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரங்களுக்கு மட்டும் செவிமடுத்தல் பொருத்தமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சுதந்திரத்துக்கும் சமாதானத்துக்கும் மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரத்திற்கும் சமாதானத்திற்கும் மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி மீண்டும் இலங்கையை பிரிவினைவாதத்திற்குள் தள்ளிவிட சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களை மீண்டும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக அணிதிரளவைக்க வேண்டும். இதனை முன்னிட்டு மக்களை தெளிவுபடுத்தும் வகையில் தேசிய சுதந்திர முன்னணி விசேட சொற்பொழிவொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த சொற்பொழிவு முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தலைமையில் எதிர்வரும் 7 ஆம் திகதி மஹரகம இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் நடத்தப்படும். இதில் அமைச்சர் சிறப்புரையாற்றுவார். (ஸ்ரீ-2)

# இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமையை செயற்படுத்துவது குறித்து கலந்துரையாடல்

(கொழும்பு)

இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமையை செயற்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமையை செயற்படுத்துவது தொடர்பான முதற்கட்ட நடவடிக்கையை முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க மேற்கொண்டிருந்தார்.

இதற்கென இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து இயந்திரங்கள் தற்போதும் தேர்தல் திணைக்களத்தில் உள்ளதாக செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமையை செயற்படுத்துவதன் மூலம் காலதாமதத்தையும் செலவையும் குறைக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கட்டாச்சேனை என்ற பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது விடுதலைப் புலிகளின் பழைய முகாம் அமைந்திருந்த பகுதியில் இருந்து பெரும் தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரி.56 ரக துப்பாக்கிகள் உட்பட பெரும் தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

ரி.56 ரக துப்பாக்கிகள், 30 தோட்டாக்கள், தொடர்பாடல் கருவிகளுக்காக பயன்படுத்தப்படும் அன்ரனா போன்றவற்றை தாம் மீட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஜே.சில்வஸ்டர் தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படையின் களுவாஞ்சிக்குடி கட்டளை அதிகாரி மாரப்பனவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

(ஸ்ரீ-2)

# மரக்கறிகளை ஏற்றி இறக்க கூடைகளை பயன்படுத்தும் நடைமுறை நேற்றுமுதல் அமுல்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் அறிவிப்பு

(கொழும்பு)

மரக்கறி மற்றும் பழ வகைகளை ஏற்றிச் செல்வதற்கு கூடைகளை பயன்படுத்துமாறு சகல வியாபாரிகளுக்கும் பணிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இந்நடைமுறை நேற்றிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மரக்கறி மற்றும் பழ வகைகள் பழுதடைவதை பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடிவதோடு தேசிய பொருளாதார வளர்ச்சிக்கும் அது உந்துசக்தியாக அமையுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளதாவது,

பழவகைகள் மற்றும் மரக்கறிகளை ஏற்றி இறக்குவதற்காக பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்துமாறு ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்த பணிப்பு நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பிளாஸ்டிக் கூடைகளில் பாவனையால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் மரக்கறி வகைகளையும் பழ வகைகளையும் பிளாஸ்ரிக் கூடைகளில் எவ்வாறு களஞ்சியப்படுத்துவது தொடர்பில் வர்த்தகர்கள் தெளிவுபடுத்தப்படுவார்கள்.

அத்தோடு பிளாஸ்ரிக் கூடைகள் பயன்படுத்தல் தொடர்பான இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அனைவரும் இதனை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# துணுக்காய் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து சேவைகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 27 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரால் திறந்து வைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று வியாழக்கிழமை தொடக்கம் தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேற்குறித்த பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய இடங்களுக்கான தனியார் பேருந்து சேவைகள் சிறப்பான முறையில் இடம் பெறுகின்றது.

இதேபோன்று முழங்காவில் நாச்சிக்குடா, அக்கராயன் போன்ற பகுதிகளில் இருந்து வரும் தனியார் பேருந்துகள் இத்துணுக்காய் பேருந்து நிலையத்தில் தரித்து மீண்டும் பயணத்தை மேற்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

மேற்குறித்த பேருந்து நிலையம் நிர்மாணிக்கப்பட்டு சேவைகள் இடம்பெறுவதற்கு துணுக்காய் பிரதேச சபையினர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பேருந்து நிலையத்தினூடாக இலங்கை போக்குவரத்து சபையினரின் சேவைகளும் இடம்பெற்றால் தாம் நன்மையடைய முடியுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-3)

# துரித கணித செயல்திட்ட போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 1 தொடக்கம் 5 வரையான பாடசாலை மாணவர்களுக்கு துணுக்காய் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான துரித கணித செயற்றிட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**தரம்-2**

ப.அபிஷா(மு/தண்டுவான் அ.த.க. பாடசாலை), பி.தனுஷியா (மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை), த.நிஷாந்த் (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்)

**தரம்-3**

நி.தனுஷன் (மு/வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க. பாடசாலை),த.தனுராஜ் (மு/ஆறுமுகம் தமிழ் கலவன் வித்தியாலயம்), த.அனோஜன்(மு/அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்)

**தரம் -4**

ர.பிறைநிலா(அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்),கு.தனுஜன் (மு/பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை),பி.சாணுகா (மு/மயில்வாகனன் தமிழ் கலவன் வித்தியாலயம்)

**தரம்-5**

இ.இலட்சியன் (மு/ஆறுமுகம் தமிழ் கலவன் வித்தியாலயம்),சி.சஜீபன் (மு/பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை), சி.மதுசாந்தி (மு/ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் வித்தியாலயம்)

மேற்படி முடிவுகளை துணுக்காய் கல்வி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபால தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-12-15)

# நாட்டில் மின்சார விநியோக நெருக்கடி ஏற்படும் அபாயம்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மின்சார விநியோக நெருக்கடி ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அனல் மின் நிலையத்திற்கு தேவையான எரிபொருள் இறக்குமதியில் பாரியளவு மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

வழமையாக ஒரு தொன் எண்ணெய் 27 முதல் 33 அமெரிக்க டொலர்கள் வரையில் விற்பனை கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அண்மையில் ஒரு தொன் எண்ணெய் 90 அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பாரிய மோசடியுடன் சில தனியார் துறை நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# எண்ணெய் இறக்குமதி தொடர்பாக பரிசீலிக்க அமைச்சரவை குழு நியமனம்

(கொழும்பு)

எண்ணெய் இறக்குமதி மற்றும் விற்பனை தொடர்பாக பரிசீலிப்பது தொடர்பான ஐவர் அடங்கிய அமைச்சரவைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட இந்த குழுவிற்கு சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தலைமை தாங்குகின்றார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஜோன் செனவிரத்தின மற்றும் டிலான் பெரேரா ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த நிலையில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் அதன் விற்பனைகளையும் சோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

# ஐஸ்கிறீம் உட்கொண்ட முப்பது பேர் திடீர் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஐஸ்கிறீம் உட்கொண்ட சுமார் 30 பேர் திடீரென சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வயிற்றோட்டம், வாந்திபேதி, காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களில் 22 சிறுவர்கள் அடங்குவதாகவும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எம். தாசீம் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை வைத்தியசாலை மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வானில் வந்த ஐஸ்கிறீமை இவர்கள் வாங்கி உட்கொண்டதாகவும் இதன் பின்னர் இவர்கள் திடீரென்று சகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து ஐஸ்கிறீம் உற்பத்தி தொழிற்சாலைக்கு விரைந்த அட்டாளைச்சேனை சுகாதார அதிகாரிகள் அத்தொழிற்சாலைக்கு சீல் வைத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் வாகனம் மோதியதில் ஒருவர் பலி

(கொழும்பு)

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஒருவரையும் அவரது மனைவியையும் கொழும்பு பொரள்ள சர்பன்டையின் வீதியில் மோதிவிட்டு தப்பிச் சென்ற அமைச்சர் ஒருவரின் பாதுகாவலர்கள் பயணித்த ஜீப் ஒன்றையும் அதன் சாரதியையும் பொரள்ள பொலிஸார் கடந்த 31 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தில் ஓய்வுபெற்ற பொறியியலாளர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மனைவி படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த பெண்ணின் கால் ஒன்று முறிந்துள்ளது எனவும் அவர் சத்திர சிகிச்சைக்கு உட்டுத்தப்பட்டுள்ளார் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஜீப் வண்டி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கவுக்கு சொந்தமானது என தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் தீவிர பாதுகாப்பு

இந்தியாவில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 3 கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.


இலங்கை தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கூடுதலான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாக கேரள மாநில பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. இதுவரையில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ராஜீவ் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை தூக்கில் இடக்கூடாது என வலியுறுத்தி பல்வேறு தரப்பினர் போராட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்




## உங்கள் உடல், மனம், உயிர்ச் சக்தி எதுவும் நீங்கள் நினைத்தவிதமாக நடக்கவில்லையெனில் அது மோசமான அடிமைத்தனம்

எனக்கு அடிக்கடி கோபம் வருகிறது. அது தவறென்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், நான் கோபப்பட்டால்தானே மற்றவர்களை கட்டுப்படுத்த முடியும்...? கோபம் சக்தியான விடயமென்று பெரும்பாலானோர் கருதிக்கொண்டு இருக்கிறார்கள்; நீங்கள் கோபம் கொள்ளும் போது, அது உங்கள் உயிருக்கு இதமாக இருக்கிறதா, அல்லது பாதிப்பாக இருக்கிறதா? கோபப்படும் போது உங்கள் உடல்,மனம்,

**ஆன்மீகம் 29**

உயிர்த்தன்மை எல்லாமே பாதிப்புக்குள்ளாகிறது. யார் தனக்குத்தானே பாதிப்பினை உருவாக்கிக் கொள்கிறாரோ அவர் புத்திசாலியல்ல. ஒரு நாளில் எத்தனை முறை நீங்கள் கோபப்படுகிறீர்கள்? கவனித்துப் பாருங்கள். "இல்லை, கோபப்பட வேண்டுமென்பது என் விருப்பமில்லை. ஆனால் என் வீட்டில் அப்படியிருக்கிறார்கள், அலுவலகத்தில் அப்படி இருக்கிறார்கள். சூழ்நிலை அப்படியிருக்கிறது." இப்படி பலவிதமான காரணங்கள் சொல்கிறீர்கள். வெளிச்சூழ்நிலையில் பலவிதமான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். வெளிச்சூழ் நிலையில் நமக்கு எதிர்மறையாக ஏதேனும் பிரச்சனை வரும்போது, உங்கள் உள்சூழ்நிலையையும் உங்களுக்கு எதிர்மறையாக ஆக்கிக்கொள்கிறீர்கள். கோபப்படுவதால் யாரும் எதையும் புரிந்து கொள்ளப் போவதில்லை.

எந்தவிதமான சூழல், எந்தவிதமான மக்கள் இருக்கிறார்களோ அந்தவிதமாகத்தான் செயல்பட வேண்டும். ரோட்டில் எருமை போகிறது. அதனிடம் போய் மென்மையாக "ஓரமாகப் போ" என்றால் அது போகாது "ஹோய்..." என்று அதன் முதுகில் தட்டினால் போய் விடும். அதற்குப் புரியும் விதமாக நீங்கள் செயல்பட வேண்டும். இதுபோன்ற மனிதர்கள் உங்களைச் சுற்றியிருந்தால் எப்போதுமே சத்தம் போடும் தேவை உங்களுக்கிருக்கிறது. ஆனால் சத்தம் போட்டாலும் ஆனந்தமாக சத்தம் போடலாமே! கோபமாய் சத்தம்போட அவசியமில்லை. கோபம் ஏன் வருகின்றது என்றால் உங்கள் உள்நிலையைப் பற்றி உங்களுக்கு எந்த அறிவும் கட்டுப்பாடும் இல்லாத ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கி விட்டீர்கள். வெளிச்சூழ்நிலை ஒரு போதும் 100% நம் கட்டுப்பாட்டில் இருக்காது. ஓரளவுக்குத்தான் வெளிச்சூழ்நிலை மீது கட்டுப்பாடு வைக்க முடியும். ஆனால் உள் சூழ்நிலையை யாவது நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாமே. வெளிச் சூழ்நிலையை இன்னொருவர் நிர்ணயித்தால் அது அடிமைத்தனம். ஆனால், இப்போது நம் உள்ச் சூழ்நிலையை வெளியில் இருப்பவர்கள் நிர்ணயிக்கிறார்கள். இது மிக மிக மோசமான அடிமைத்தனம். உங்கள் மனம், உங்கள் உடல் உங்கள் உயிர்ச்சக்தி இவை எதுவும் நீங்கள் நினைத்தவிதமாக நடக்க



வில்லை என்பது மிக ஆழமான அடிமைத்தனம். பெரும்பாலான மகக்கள் இத்தகைய அடிமைத்தனத்தில் சிக்கிப்போயிருக்கிறார்கள். உங்கள் கோபத்திற்கு வெளிச்சூழ்நிலை காரணமில்லை. உங்கள் சூழ்நிலை பற்றி உங்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுமில்லை என்பதே இதன் காரணம்.

கோயிலில் ஆயுதங்கள் இல்லாத சாமியே இல்லை. ஒரு பாதகமும் அறியாத குழந்தைகளை கடவுளுடன் ஒப்பிடுவது ஏன்?

முதன் முதலில் கடவுளை வழிபட்டவர்கள் எல்லாம்தங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றுதான் வழிபட்டார்கள். இன்று பெரும் நகரங்களிலும் மாநகரங்களிலும் வாழும் உங்களுக்கு இது புரிய நியாயம் இல்லை. ஏனெனில் உங்கள் தேசத்தின் எல்லைகளை பல வீரர்கள் காவல் காக்கிறார்கள். அந்தக் காவலுக்கென்று பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. முன்னரெல்லாம் கடவுள் வடிவங்கள் உருவாக்கப்பட்ட காலங்களில் விலங்குகளிடமிருந்தும் சக மனிதர்களிடமிருந்தும் மனிதர்களுக்குப் பாதுகாப்பு தேவைப்பட்டது. எனவே கடவுள் வடிவங்களை உருவாக்கியபோது அவை ஆயுதமேந்தியவையாக மனிதனால் உருவாக்கப்பட்டன. ஆனால் கடவுளின் உருவங்களையே சாந்த ரூபம், உக்கிர ரூபம் என்று இரண்டாகப் பிரித்தார்கள்.

உக்கிர ரூபத்தில் ஆயுதங்களோடு உள்ள கடவுளர்கள், சாந்த ரூபத்தில் ஆயுதமின்றிக்காணப்பட்டார்கள். குழந்தைகளை ஏன் கடவுளோடு ஒப்பிட்டார்கள் என்றால்... அவர்கள் மனிதர்களின் வஞ்சனைகளை இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. படைப்பின் மூலம் எதுவோ அதனோடு இன்னும் நெருக்கமாக உள்ளார்கள். படைப்பின் மூலம்தான் கடவுள் என்று சொல்லப்படுகிறது. படைப்பின் மூலத்தோடு தங்கள் தொடர்பை நெருக்கமாக கொண்டிருப்பதால் குழந்தைகளை கடவுளுடன் ஒப்பிட்டார்கள்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# புதுமைப்பித்தன் 06

## எதிரொலிச்சான் கோவில்களை தகர்க்கப் புறப்பட்ட கலகக்காரன்

"சமூகம் ஒரு நாளில் ஏற்பட்ட சம்பிரதாயம் அல்ல. மனித வர்க்கத்தின் அனுபவத்தின் விளைவு. அனுபவம் என்பது உயிர் வாழ்தல் என்பதன் பல்லவியாகையால், சித்தத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமூகத்தின் பாதுகாப்புகளில் அது ஒன்று. சமூக விழிப்பு என்பது விதிவிலக்கான செய்தி. அனுபவங்கள் காலத்துக்குப் பிற்பட்டவையாகப் பொக்காகி பொடிப் பொடியாக உதிரும் வரை அதாவது பழைய பாதுகாப்பானது நசிக்கும் வரை சமூகம் ஒருமிக்கக் கவலை கொள்வது கிடையாது. அந்தச் சமயம் ஏற்படும் வரை.

**பாரவி-தமிழ்நாடு**

புதிய கொள்கைகளை மனத்தினாலும் நினைப்பவனை, சமூகம் நசுக்க முயல்கிறது. அனுபவங்கள் பாழாகி அவை புதிய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பது இலேசான காரியமல்ல. முடிவும் முதலும் சந்திக்கும் இடத்துக்குத்தான் புரட்சி என்று பெயர். அது இயற்கைத் தத்துவத்தின் விதி. மரணச் சங்கடமும் பிரசவ வேதனையுந்தான் ஜீவிதத்துவத்தின் அந்தரங்க விதி. மனிதன் நிருமித்த சமுதாயத்துக்கும் அவன் சித்தத்தை அலைக்கும் எண்ணங்களுக்கும் அதே விதிதான்." (உங்கள் கதை 1946) புதுமைப்பித்தன் எழுதியுள்ளது. புதுமைப்பித்தன் என்ற கலகக்காரன் எதிரொலிச்சான் கோவில்களைத் தகர்க்கப் புறப்பட்டவனே தவிர, எதிரொலிச்சான் கோவிலாக ஒப்பாதவன் என்பதை அர்த்தப்படுத்துவதாகவும் அர்த்தமுறுத்துவதாகவும் உள்ளதை இனமொழி அழிப்புச் சூழலிலும் போலி இலக்கிய ஆரவாரக் கூட்டத்திலும் 'நடிப்பு' இலக்கியவாதிகளிடையேயும் வாழ்ந்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

உண்மையான விடுதலை இன்னும் கைவசப்படாத கலை. இலக்கியக்காரர்களென வெளிப்படுத்திக் கொள்ள முயலும் நாம் உணர்ந்தது என்ன? உணர்த்துவது என்ன? என நம்மை நாமே கடுமையான ஆய்வுக்குட்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். எதிரொலிச்சான் கோவில்களாக ஆவதிலிருந்தும் படைப்பாளிகள் தம்மைத்தாமே தடுத்து வழிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. புகழ், இகழ் மூலம் வெளிப்படுவது அவர்களல்ல. வெளிப்படுத்தும் நாம் தான். புதுமைப்பித்தன் என்ற பரிசோதனைக்காரனை, எதிரொலிச்சான் கோவில்களைத் தகர்க்கப் புறப்பட்ட கலகக்காரனைப் படிக்கையில், என்னைப் பற்றித்தான் நான் படித்து வந்தேன் என்பதான உணர்வினை பகிர்ந்து கொள்வதில் எனக்கு தயக்கமேதுமில்லை. *(முற்றும்)*

## போகிற அவசரத்தில் என் கால்களுக்குள் புகுந்துகொண்ட வேறொருவர் செருப்பு

புகுந்தன கால்கள் வேறொருவர்
செருப்புள்
இடறின எதுவோ,
ஆயினும் போகிற அவசரம்
உணர்வின் அருட்டலை
உதறியவாறு
பஸ்ஸில் ஏறிற்று.
பஸ் ஓடிக்கொண்டிருந்தது.
"ஓய் பொன்னரே!"
யாரோ என்னை
அழைப்பது கேட்டது.
யாரது? யாரது?
பின்னால் முன்னால்
எவருமே இல்லை!
பஸ் ஓடிக்கொண்டிருந்தது.
மீண்டும் அதே குரல்!
"ஓய் பொன்னரே!"
யாரது? யாரது?
கீழே இருந்தே அக்குரல் வந்தது.
ஓ! இப்போ புரிந்தது.
கீழேயிருந்தென் கால்
செருப்புகள் பேசின.
"சரி சொல்லப்பா, என்ன விஷயம்?
எதற்காய் அழைக்கிறாய்?"
"நீர் கூடுவிட்டுக்கூடு பாய்ந்திருக்கிறீர்
என்பது தெரியுமா"
என் செருப்புகள் கேட்டன.
"என்ன சொல்கிறீர்?"
"இன்னுமா புரியவில்லை,
நான் வேறொருவர் செருப்பு.
எனக்குள் எப்படி உன் கால்கள்
புகுந்தன?"
உச்சியில் அடித்தாற்போல்
எல்லாம் புரிந்தது.
இதுவும் ஒரு கூடுவிட்டு
கூடு பாய்தல்.
இதுகால்வரை நீ சேகரித்த
நல்லதோ கெட்டதோ
இதுகால்வரை செருப்புக்குரியவர்
சேகரித்த நல்லதோ கெட்டதோ
ஓர் கணப்பொழுதில்
இடம் மாறிக்கொண்டன.
எவருடைய சேகரம்
நல்வலு வுடையதோ
அவருக்கே இதற்கான
வாடகை உரியது!
செருப்புத் தீர்ப்புக் கூறிற்று.

மு.வெ

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# துப்பறிதலில் பூச்சிகளின் பங்களிப்பு


பூமியில் பிறந்த அனைத்து உயிர்களும் இறக்கின்றன. ஆயினும் கலியுகத்தில் கொலைகள் சர்வ சாதாரணமாகி விட்டன.

இவ்வாறு நடைபெறும் மரணங்களின் மூலங்களைக் கண்டறிய பல்வேறு முறைளை துப்பறிவாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

தற்காலத்தில் விரல் அடையாளங்கள்(Finger Print) சம்பவ இடத்தில் பெறப்படும் மனித பிறப்புரிமைப் பதார்த்தங்களில் (DNA) பகுப்பாய்வு என்பன அவற்றில் சிலவாகும். இவற்றுடன் பூச்சிகளைப் பாவித்தலும் ஒரு முறையாகும்.

துப்பறிதலில் பூச்சிகளைப் பயன்படுத்துதல் ஆனது 14 ஆம் நூற்றாண்டு முதலே காணப்பட்டாலும் 1990 இன் பின்னரே இது பற்றி பெருமளவில் பேசப்பட்டன.

பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்த Dr. லூயிஸ் பிரான் கொயிஸ் முதலில் துப்பறிதலில் பூச்சிகள் உதவுகின்றன என்று எடுத்துரைத்தாலும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Dr. ஹேமன் ரெயின்காப் என்பவரே பூச்சிகளைப் பயன்படுத்தி துப்பறிதல் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தவராவார். பூச்சிகளானது பிரதானமாக எங்கே,எப்போது, எவ்வாறு மரணம் சம்பவித்தது என்பதை அறியப் பயன்படுத்தப்படுகின்றன.



படம் 1–மனித இரத்தம் தோய்ந்த தசைப்பகுதியில் காணப்படும் இலையான் ஒன்று

பொதுவாக தசைப்பகுதியை உண்ணும் பூச்சிகளும், இரத்தம் குடிக்கும் பூச்சிகளும் இதில் பெருமளவு உதவுகின்றன. இலையான்கள் (படம் 1).

நுளம்புகள் (வருணம்-டிப்ரெரா Diptera), வண்டுகள் (வருணம்-கொலியப்றரா- Coeleoptera), அந்துப்பூச்சிகள் (வருணம்-லெபிடொப்றரா, (Lepidoptera) குளவிகள் , தேனீகள், எறும்புகள் (வருணம் ஹைமனப்றரா (Hymenoptera) என்பன சில உதாரணங்களாகும்.

இதற்கு பூச்சிகளின் சூழலியல், வளர்ச்சி வீதம், விருத்தி, நடத்தையியல், புவியியல் சார்ந்த பூச்சிகளின் பரவுகை என்பன தொடர்பான அறிவு அத்தியாவசியமானதாகும்.

பூச்சிகளைப் பயன்படுத்தி துப்பறிதல் ஆனது The silence of the lambs, My Girl ஆகிய ஆங்கில திரைப்படங்களில் தெளிவாகக் காட்டப்படுகின்றது.

**வாழ்க்கை வட்டம்:-** பொதுவாக நிறையுடலிப் பூச்சிகள் இறந்த மனித உடலத்தை தமது உணவு முதலாகவும் இனப்பெருக்கம் செய்து தமது சந்ததியை விருத்தி செய்யும் இடமாகவும் பயன்படுத்துகின்றன.

இவை பூரண உருமாற்றத்தைக் காண்பிக்கின்றன(முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி)இவை உயிர் வளர்ச்சி வீதத்தைக் காண்பிப்பதால் இறந்த உடல்கள் பிரிந்தழிகைக்குட்படுவதற்கு முன்னரே தமது வாழ்க்கை வட்டத்தை நிறைவு செய்கொள்கின்றன.

இப்பூச்சிகள் பொதுவாக தமது முட்டைகளை இறந்த உடலத்தின் மூக்கு, வாய், காது போன்ற திறந்த பகுதி களில் (ஒன்பது வாசல்களில்) அதிகளவில் இருக்கின்றன.

இறந்த உடலை அடையும் முதலாவது பூச்சியினம் இலையான்கள் (Blow Flies) ஆகும்.


இவை ஏறத்தாழ 10 மைல் தொலைவிலிருந்தே இறந்த உடல் உள்ள இடத்தை உணர்ந்து கொள்ளும்.

இவற்றின் கூட்டுப்புழு (Pupa) நிலையானது துப்பறிதலில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

**மரணம் சம்பவித்த நேரத்தை அறிதல்:-** பூச்சிகளின் வாழ்க்கை வட்டத்தின் ஏதாவது ஒரு நிலை(உ+ம் குடம்பிகள், படம் 2) இறந்த உடலில் காணப்பட்டால் இதன் விருத்தி தொடர்பான அறிவைப் பயன்படுத்தி எந்த நேரத்தில் மரணம் இடம்பெற்றது என்பதனை தீர்மானித்துக் கொள்ளலாம். **மரணம் சம்பவித்த முறை-** இறந்த உடலின் காயங்களில் காணப்படும் முட்டைகள், குடம்பிகளின் அடர்த்தியின் மூலம் மரணம் எவ்வாறு நடைபெற்றது என்பதை அறியலாம். உதாரணமாக கழுத்தை கயிறு போன்றவற்றால் இறுக்கி கொலை நடைபெற்று இருப்பின் கழுத்திலுள்ள உள் இழையங்கள் வெளிக்காட்டப்பட்டு காயங்கள் ஏற்படும். இவ்வாறு ஏற்படும் காயங்களில் பூச்சிகளின் விருத்தி நிலைகள்காணப்படும். பெரும்பாலும் மரணம் சம்பவித்து சில நாட்களின் பின் கண்டெடுக்கப்படும்உடலங்களிற்கு இம்முறை ஏற்றதாகும்.



படம் 2–மனித இறந்த உடல் ஒன்றில் காணப்படும் இலையான்களின் வெண்ணிற குடம்பிகள்




மேலும் நஞ்சூட்டப்பட்டு மரணம் ஏற்படுத்தப்பட்டு இருப்பின் அவ்விடத்தில் காணப்படும் இறந்த குடம்பிகளைப் பகுப்பாய்விற்குட்படுத்துவதன் மூலம் கண்டறியலாம்.

இம்முறையானது கொலை நடந்ததாகச் சந்தேகிக்கப்படும் இடத்தில் மனித உடலின் இழையங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தாகக் கருதப்படுகின்றது.

**மரணம் நடைபெற்ற இடம்:-** மரணத்தின் பின்னர் அவ்வுடல் சம்பவம் இடம் பெற்ற இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதா என்பதனையும் இப்பூச்சிகளின் வாழிடம், வாழ்க்கை முறை தொடர்பான அறிவைப் பயன்படுத்தி அறிந்து கொள்ளலாம். உதாரணாக இலையான்கள் (Blow Flies) சூரிய ஒளியுள்ள வெளிச்சூழலில் காணப்படுபவை அவற்றின் முட்டைகளும் குடம்பிகளும் கொண்ட இறந்த உடல் ஒன்று இருட்டான அகச்சூழலில் கண்டு பிடிக்கப்படுமாயின் மரணம் நிகழ்ந்த இடம் வேறு என்பதை தீர்மானித்துக் கொள்ளலாம்.

பூச்சியியலாளர்கள் இவ்வாறு ஆதாரங்களைத் திரட்டுவதற்கு சிறிய கைவலைகள், சிறிய பெயரிடப்பட்ட சோதனைக் குழாய் கள், இடுக்கிகள், கொள்கலன்கள், ஊசிகள் என்பவற்றைப்பயன்டுத்துகின்றனர்.

மேலும் துப்பறிதலில் வெப்பநிலை, ஒளிச்செறிவு, ஈரப்பதன், மழைவீழ்சிசி, இரைகௌவும் பூச்சிகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.


பூச்சியியலுடன் இணைந்த DNA தொழில்நுட்பமானது துல்லியமான துப்பறிதலுக்கு உதவுகின்றது.

வளர்ந்து வரும் இத்துறையானது இலங்கைக்கு மட்டுமல்ல பெரும்பாலான உலக நாடுகளிற்கு தற்பொழுது அவசியமான ஒன்றாகும். (தொடரும்)

செல்வி.ஆர்.சோபர்ணா
B.Sc (Hons) in Zoology,
Dept.of Zoology,
University of Jaffna.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 48

சிறு பிள்ளை ஒன்று மூடப்பட்ட காரினுள் ஒரு நூலினால் கட்டப்பட்ட பலூனை பிடித்திருக்கின்றது. காரானது ஆர்முடுகும் போது பலூனின் நிலை எவ்வாறு அமையும்?



விடைகளை 12.09.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 47 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கார்த்திகேசு செல்வரத்தினம்,
வீரபத்திரர் கோவிலடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

**புதிர் 47 இற்கான கேள்வியும் விடையும்:**

ஒரு அல்(f)பா துணிக்கையின் கூறுகள் யாவை?

2 புரோத்தன்களும் 2 நியூத்திரன்களும்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல . 48**

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
தொ.பே. இல :........................................
கையொப்பம் :........................................

## திருகோணமலையில் நான்கு ஆயிரம் இராணுவத்தினருக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

திருகோணமலையில் 4 ஆயிரம் இராணுவத்தினருக்கு விசேட பயிற்சி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு அவசர சந்தர்ப்பத்தின் போது கூட்டாக இணைந்து செயற்படுவது எவ்வாறு என்றும் இலக்கை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பயிற்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முப்படையினரையும் இணைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி திட்டம் தியகாவா என அழைக்கப்படுகிறது.

முப்படை அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் 4 ஆயிரம் பேர் இப்பயிற்சித் திட்டத்தில் இணைந்து பயிற்சி பெறுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு நாளை திருகோணமலை கடற்படை முகாமிற்கு அருகில் புடைவைக்கட்டு பிரதேச கடற்கரையருகில் இடம்பெறும்.

இராணுவக் கமாண்டர் படைப் பிரிவு, விசேட படைப் பிரிவும் இப்பயிற்சி திட்டத்தில் பங்களிப்பு செய்கின்றனர்.

விமானத் தாக்குதல் வாகனம், ஹெலிகொப்டர், கடற்படைத் தாக்குதல் வாகனங்கள் என்பனவும் இப்பயிற்சி திட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தியகாவா பயிற்சித் திட்டத்தில் தரை, வான் கடலில் இருந்து தாக்குதல்களை மேற்கொண்டு எதிரிகளின் முகாம்கள் மற்றும் இயந்திரங்களை எவ்வாறு தோற்கடிப்பது தொடர்பில் பயிற்சி வழங்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பாரிய கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இரு புலிச்சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

உ[illegible] அளவில் பாரிய கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட இரண்டு தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பெங்களூர் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் இரண்டு கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்கள் இருவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடன் அட்டை மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் மலேசியாவில் இருப்பதாகவும் இந்தியாவில் ஆறு முக்கியஸ்தர்கள் தலைமறைவாக இருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

39 வயதான ஷியாம் மற்றும் 25 வயதான வாசீனம் பாஸா ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தாம் பணம் வழங்கியதாக சந்தேகநபர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிகிறது. (ஸ்ரீ-2)

## சீனாவின் உளவுக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

(கொழும்பு)

சீன உளவுக் கப்பல் ஒன்று கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிட்டதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய கடற்படையினரின் நடவடிக்கைகளை குறித்த உளவுக் கப்பல் கண்காணித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த சீன உளவுக் கப்பலில் 22 ஆய்வுக் கூடங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ராடர்களுக்கு சிறிய ரக மீன்பிடிப் படகினைப் போன்று தோற்றமளிக்கக் கூடிய வகையில் இந்தக் கப்பல் அமைந்துள்ளது.

அந்தமான் தீவுப் பகுதியிலிருந்து இந்து சமுத்திரத்தின் வரைப் படங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

மிகவும் முக்கியமான பல தரவுகளை இந்த சீன உளவுக் கப்பல் சேகரித்துக் கொண்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

திரட்டப்பட்ட தகவல் தாக்குதல்களுக்கு பயன்படுத்தக் கூடியவை எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்திய கடற்படையினரை பின் தொடர்ந்து சென்ற சீன உளவுக் கப்பல் திடீரென கொழும்புக்கு சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பேருந்தில் குழந்தையை கைவிட்டுச் சென்ற பெண் வசமாக மாட்டிக் கொண்டார்

ஒன்றரை வயது குழந்தையை பேருந்தில் கைவிட்டு இறங்கிச் சென்ற பெண்ணொருவரை நேற்று முன்தினம் வவுனியா பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பெண்ணை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட பதில் நீதிபதி முருகேசு சிற்றம்பலம் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியாவில் இருந்து செட்டிக்குளம் நோக்கிச் சென்ற பேருந்தில் கடந்த 31 ஆம் திகதி பயணம் செய்த இந்தப் பெண் மதியம் 1.30 அளவில் பேருந்தில் குழந்தையை கைவிட்டு இறங்கிச் சென்றுள்ளார். இது குறித்து பேருந்தின் சாரதி வவுனியா பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

பெண்ணினால் கைவிடப்பட்ட குழந்தை வவுனியா வைத்தியசாலையில் சிறுவர் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் இந்தக் குழந்தையை பராமரித்து வருகின்றனர். (ஸ்ரீ-2)

## 2011.09 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ கி.மு.44-எகிப்தின் ஏழாம் கிளியோபாத்ரா தனது மகன் சிசேரியனை அரசனாக்கினாள்.

★ 1642- இங்கிலாந்து நாடாளுமன்றம் லண்டன் நாடக அரங்குகள் அனைத்தையும் மூடிவிட உத்தரவிட்டது.

★ 1666- லண்டனில் இடம்பெற்ற பெருந்தீயினால் மூன்று நாட்களில் புனித போல் தேவாலயம் உட்பட 10 ஆயிரம் கட்டடங்கள் அழிந்தன.

★ 1752- ஐக்கிய இராச்சியத்தில் கிரகோரியன் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1792-பிரெஞ்சுப் புரட்சியின் போது இடம்பெற்ற கலவரங்களில் மூன்று ரோமன் கத்தோலிக்க ஆயர்கள் உட்பட இருநூற்றிற்கும் அதிகமான குருமார்கள் கொல்லப்பட்டனர்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் அட்லாண்டாவை விட்டு விலகிய அடுத்த நாள் அமெரிக்கப் படைகள் அங்கு போய்ச் சேர்ந்தன.

★ 1870- பிரான்சில் செடான் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரஷ்யப் படையினர் பிரான்சின் மன்னனான மூன்றாம் நெப்போலியனையும் அவனது படையினர் ஒரு இலட்சம் பேரையும் கைது செய்தனர்.

★ 1885-வயோமிங் மாநிலத்தில் 150 வெள்ளையின சுரங்கத் தொழிலாளர்கள் வெளிநாட்டு சீனத் தொழிலாளர்களைத் தாக்கி அவர்களில் 28 பேரைக் கொன்று 15 பேரைக் காயப்படுத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் நகரை விட்டுத் தப்பியோடினர்.

★ 1898-பிரித்தானிய மற்றும் எகிப்தியப் படைகள் சூடானிய பழங்குடியினரைத் தாக்கி அந்நாட்டில் பிரித்தானிய மேலாண்மையை ஏற்படுத்தினர்.

★ 1935-புளோரிடாவில் இடம்பெற்ற சூறாவளியினால் 423 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: போலந்து மீதான முற்றுகையை அடுத்து கிதான்ஸ்க் நகரம் நாசி ஜேர்மனியினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பசுபிக் போர் முடிவுக்கு வந்தது. ஜப்பானின் கடைசி அதிகாரபூர்வமான சரணடைதல் டோக்கியோ வளைகுடாவில் மிசூரி என்ற அமெரிக்கக் கப்பலில் நிகழ்ந்தது.

★ 1945- வியட்நாம் பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்து வியட்நாம் மக்களாட்சிக் குடியரசு என்ற பெயரில் (வடக்கு வியட்நாம்) ஹோசிமின் தலைமையில் ஆட்சியை அமைத்தது.

★ 1951- எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

★ 1958-அமெரிக்காவின் விமானப்படை விமானம் ஒன்று சோவியத் ஆர்மீனியாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

★ 1965- பாகிஸ்தான் படையினர் இந்தியாவின் காஷ்மீருக்குள் நுழைந்தனர்.

★ 1969- ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தன்னியக்கப் பணம் வழங்கி நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது.

★ 1970-சந்திரனுக்கான அப்பலோ 15 விண்கப்பலின் திட்டம் கைவிடப்பட்டதாக நாசா அறிவித்தது.

★ 1990- மால்டோவாவின் ஒரு பகுதியான திரான்ஸ்னிஸ்திரியா தன்னிச்சையாக வெளியேறி தன்னை சோவியத்தின் ஒரு குடியரசாக அறிவித்தது. ஆனாலும் இதனை சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பசோவ் ஏற்கவில்லை. இன்று வரையில் இது எந்த நாட்டினாலும் அங்கீகரிக்கப்படவில்லை.

★ 1996- பிலிப்பைன்ஸ் அரசுக்கும் மோரோ தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

★ 1998- நோவா ஸ்கோவியாவில் சுவிற்சர்லாந்து விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 229 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்பு

★ 1913-இஸ்ரேல் கெல்ஃபாண்ட், சோவியத் கணிதவியலர் (இ.2009)

### இறப்புக்கள்

★ 1969-ஹோ சி மின், வியட்நாம் தலைவர் (பி.1890)

★ 1973- ஜே.ஆர்.ஆர். டோல்கியென், பிரித்தானிய எழுத்தாளர் (பி.1892)

★ 2009-ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் (பி.1949)


### சிறப்பு நாட்கள்

★ திரான்ஸ்னிஸ்திரியா- சுதந்திரதினம் (1990 எந்த நாட்டினாலும் இது அங்கீகரிக்கப்படவில்லை)



வியட்நாம் நாட்டின் குடியரசுத் தினம் (1945)

# நவீன எண் சோதிடம்



## பொது ஜன உபகாரியான இவர்கள் நல்ல அன்புள்ளம் கொண்டவர்கள்

35

## உடல் எண் 4 உயிர் எண் 6

4,13,22,31 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 6 வருமேயானால் இவர்கள் ராகு, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் தைரியசாலியாகவும், பிறரைக் கவரும் காந்த சக்தியுடையவராகவும், கேட்பவரை தன்வயப்படுத்தும் பேச்சாளராகவும் இருப்பர். இவர்கள் மனம் எப்போழுதும் அழகான பொருளின் மீது நாடிச் செல்லும். பார்ப்பதற்கு அழகாகக் காட்சியளிக்கும் இவர்கள் பிறரை மகிழ்வித்து பொருளீட்டக்கூடிய தொழில்களைச் செய்து உயர்வடைவர்.

பெயர் தனது பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமைந்து விட்டால்,உலகிலுள்ள அனைத்து சுகங்களையும் பெற்று வளமான வாழ்க்கை வாழ்வர். இவர்களது மனம் எப்பொழுதும் இன்பகரமான வாழ்வை நோக்கியே செல்லும்.

பொதுஜன உபகாரியான இவர்கள் நல்ல அன்புள்ளம் கொண்டவர்களாகவும், தன்னைச் சார்ந்தவர்கள் உயர்ந்த வாழ்க்கையைப் பெற உறுதுணையாகவும் இருப்பர். ஆனால், ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் போதே பாதியில் விட்டுவிட்டு அடுத்த காரியத்திற்குச் செல்லும்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

பழக்கமும் உண்டு. பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் இளமையில் கஷ்டப்பட்டாலும், பிற்கால வாழ்க்கையில் வசதியாக வாழ்கின்றனர்.

பெயர் பொருத்தமின்றி இருக்கும் சிலர் எல்லாத் திறமைகள் இருந்தும், கஷ்டப்படுகின்றனர். இவர்கள் மனம், அழகானவீடு கட்டுவதிலும், அழகான கார் வைத்துக் கொள்வதிலும், அழகான பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலுமே நாடிச் செல்லும்.

மிகவும் ரசனை உள்ளவர்களாதலால், இசை, நாட்டியம், விளையாட்டு போன்றவற்றைக் கண்டு, "அதைப்பற்றிச் சிறப்பாக விமர்சிப்பர். எப்பொழுதும் தூய்மையாகவும் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பதால் இவர்களை எவ்வளவு கூட்டத்திலும் அடையாளம் கண்டு கொள்ளலாம். பழைய வாகனங்ளை வாங்கினால் கூட அதை அழகுபடுத்தி வைத்துக் கொள்ளுவர். இந்த உலகிகத்தில் எவ்வளவோ அனுபவிக்க வேண்டியது இருக்கின்றது என்று கூறுபவர்களும் இவர்களே. நல்ல ருசியான உணவு இவர்களுக்குத் தேவை. சாப்பிடும் பொழுது சுவாரிசியமாகப் பேசிக் கொண்டே சாப்பிடுவர். இவர்கள் பேசுகின்ற மொழி சுத்தமாகவும், மிடுக்காகவும் இருக்கும். இவர்கள் ஒரு பொருளைப் பற்றிக் கூறும் போது, பிறரும் அதை வாங்குவோமா என்று ஆசை வந்துவிடும். பெரும்பாலும் இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது.

அவ்வாறு அமையவில்லையென்றால் பெயர் சரியாக அமைவில்லை என்பது தான் காரணம். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர் வியாபாரியாக இருந்தால் கவர்ச்சியாகப் பேசி பொருட்களை விற்பதில் கைதேர்ந்தவராக இருப்பர். தொழில் செய்து பெரும்பணம் தேடும் பாக்கியம் இருப்பதால்,பலர் தொழில் செய்து கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் உத்தியோகத்தில் இருக்கின்றனர்.

கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் கோவிலுக்குச் செல்லும் போதுகூட ஆடம்பரமாகவும் அதிக செலவும் செய்து கொண்டும் செல்வர்.

**தொழில்**

கலைகளாலும், பேரம் பேசுவதாலும், ஆடம்பரப் பொருளை விற்பதாலும், இரும்பு வாகனம் போன்றவற்றாலும் பொருளீட்டும் பாக்கியம் உடையவர்கள். சிலர்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

மருந்து சம்பந்தப்பட்ட தொழிலாலும் உயர்வடைவர்.

**நோய்**

உடலுறவு சம்பந்தமான நோயாலும், உஷ்ணம் சம்பந்தமான வியாதிகளாலும் துன்புறுவர். உப்பு, சக்கரை, கொழுப்பு போன்றவற்றைக் குறைத்துக் கொள்வது நலம். வாயுக்கோளாறு, முதுகுவலி வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு சூரயன், சுக்கிரன் ஆதிக்கமான 19,37,46,64,73,15, 24,33,42,60,69 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-1,6,

யோகமான தேதிகள்-1,10,19,28, 6,15,14

யோகமான மோதிரக்கல்- கோமேதகம், வெளிர் நீலக்கல்,

யோகமான நிறம்-மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை

ஆகாதநிறம்-கறுப்பு,சிவப்பு கத்தரிப்பூ கலர்

ஆகாத தேதிகள் -8,17,26,3, 12,21,30


## பெயர் எண்களின் பலன்

**119 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகவோ,வியாபார விலாசமாகவோ அமைத்துக் கொண்டால், பிறரால் தேடப்பட்ட சொத்துக்கள் கிடைக்கும். பெண்ணாக இருந்தால் அண்களாலும் அண்களாக இருந்தால் பெண்களாலும் வருமானம் உண்டாகும். ஆடம்பரப் பிரியரான இவர்கள் பகட்டுப் பொருள் வியாபாரம் செய்வதாலும் திரவப் பொருள் வியாபாரம் செய்வதாலும் லாபம் சம்பாதிப்பர். ஆனால், 9, 18, 27 தேதியில் பிறந்தவர்களுக்கு இந்த எண் கெடுதலை விளைவிக்கும்.

**120 எண் பலன்**

இந்த எண்ணை பெயராகவோ, வியாபார விலாசமாகவோ அமைத்துக் கொண்டால் இவரது பேச்சுத் திறனால், பலர் கவரப்படுவர். பிறருக்காக உழைக்கும் எண்ணம் கொண்ட இவர்கள் சுயவாழ்க்கையை உயர்த்த வழிதெரியாது தவிப்பர். தன் மனதில் உள்ள இன்பதுன்பங்களை வெளிக்காட்டாது எப்பொழுதும் ஒரே



மாதிரிக் காட்சியளிப்பர். தெய்வ பக்தியும், திடமான மனதும் கொண்ட இவர்கள், தன் மதத்திற்கு செலவு செய்யத் தயங்கமாட்டார்.

**121 எண் பலன்**

இந்த எண்ணைப்பெயராகவோ, வியாபாரவிலாசமாகவோ அமைத்துக் கொண்டால், தனது உயர்வக்காக எப்போழுதும் உழைத்துக் கொண்டே இருப்பர். முன் பின் சிந்தித்து எதிலும் செயற்படுவர். பல வெற்றியை அடைந்த போதிலும் ஒரு தோல்வியையும் காண்பர்.ஆனால், தோல்வியைச் சமாளித்து மீண்டும் வெற்றி காண்பர். 1,10,19,28; 6,15,24 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு இவ்வெண் நற்பலனைக் கொடுக்கும்.

**122 எண் பலன்**


இந்த எண் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ அமைந்து கொண்டால், ஆரம்ப வாழ்க்கை கஷ்டமாக இருந்தாலும் நாளுக்கு நாள் தொழில் உயர்ந்து கொண்டே போகும். முதலுடன் பல கூட்டாளிகள் வந்து சேருவர். இவர்களுக்கு உதவ அனேகர் தயாராக இருப்பர். கமிஷன், ஏஜென்சீஸ், வாகனம், ஃபேர்னிச்சர்ஸ் போன்றவற்றாலும் இன்னும் பல தொழிலாலும் பெரும் பணம் சம்பாதிப்பர். இவ்வெண் யாவரும் விரும்பத்தக்கதே

**123 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ அமைத்துக் கொண்டால், நாளுக்கு நாள் வேகமான முன்னேற்றத்தைக் காண்பர். பெரிய திட்டங்களைப் போட்டு வெற்றியடைவர். நாளுக்கு நாள் முன்னேறிக்கொண்டு போகும் இவர்கள் தன்னால் எதையும் சாதிக்கமுடியும் என்ற தன்னம்பிக்கையில் உயர்வர். எல்லா வசதிகளையும் பெற்று மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வர். ஆனால், 3,12, 21,30 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு இந்த எண் நற்பலனை அளிக்காது.

(தொடரும்)

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!



சீமானின் அதிரடித் தொடர் 1

## காங்கிரஸ் கட்சி ஓர் இடத்தில் வென்றாலும் நமக்கு அவமானம்

கடந்த மாதம் 13 ஆம் திகதி... அதிகாலை இரண்டு மணிவரை உறக்கம் இல்லை. புரண்டு புரண்டு படுக்கிறேன். இத்தனைக்கும் முதல்நாள் களைப்பில் படுக்கையில் விழுந்த கணமே நான் உறங்கியிருக்க வேண்டும். அசதியோ களைப்போ என் கண்களில் தூக்கத்தை வார்க்கவில்லை. படுக்கையில் இருந்து எழுந்து என் அலுவலக மாடியில் இருக்கும் தனி அறைக்குப் போகிறேன். "யாரு?..." என அதட்டுகிறது பாதுகாப்பாகப் படுத்திருக்கும் தம்பியின் குரல். அருகே வந்து முகம் பார்த்து "அண்ணே தூக்கம் வரலியா?" என்கிறான் தம்பி. "இந்த அண்ணனுக்கு ஏதும் ஆகிடுமோன்னு நீ எப்படி உறங்காமல் கிடக்குறியோ... அதே மாதிரி இத்தனை நாள் அடை காத்த கனவுக்கு ஏதும் ஆகிடுமோன்னு பதற்றமா இருக்குப்பா..." என்றேன்.

கவலை, கண்ணீர், ஏக்கம், எதிர்பார்ப்பு, வெற்றி, வீம்பு எதுவானாலும் அதனை நான் இறக்கி வைக்கும் இடம் என் அலுவலகத்தின் மாடியிலுள்ள தனியறைதான். மாவீரனாய் என் அண்ணன் அந்த அறையில் சிரித்துக் கொண்டிருப்பான். அவன் ஈழத்தில் எப்படி மரங்களாலும் கூரைகளாலும் அறை அமைத்திருந்தானோ... அதே போலத்தான் என் தனி அறையையும் அமைத்திருந்தேன்.

என் ஆழ்மன ஆங்காரத்தைப் போலவே என் அறையையொட்டிப் படர்ந்திருந்த மாமரம் பெருங்காற்றில் இரைச்சலோடு அசைந்தது. அண்ணனின் முகத்தில் இருக்கும் சிரிப்பு ஆயிரம் அர்த்தங்களைக் கொண்டது. வெற்றி என்றால் நெற்றி வியர்வையைப் போல் சுண்டி எறியவும் தோல்வி என்றால் தோளில் சுமக்கவும் கற்றறிந்த சிரிப்பு அது. அண்ணன் எவ்வளவு பெரிய அசாத்தியன் என்பது அவன் முன்னால் சிறு உயிரியைப் போல் நான் சில்லிட்டுக் கிடக்கிறேன் என்பது அப்போது தான் புரிந்தது. "உனக்கான கடமையை நீ செய்துவிட்டாய். விளைவு என்னவாக இருந்தாலும் எதிர்கொள்!" மனதுக்குள் அண்ணன் தைரியம் வார்ப்பது போலிருந்தது.

சிறு மரக்கட்டைகளை அடுக்கிச் செய்யப்பட்ட இருக்கையில் அமர்கிறேன். அதுதான் என் சிம்மாசனம். எனக்கு மிக நெருங்கிய பத்திரிகையாளர் தம்பி ஒருவரை அலைபேசியில் அழைக்கிறேன்

"என்னண்ணே... இந்த நேரத்தில்?"

"ஒண்ணுமில்லப்பா... இன்னிக்கு தேர்தல் முடிவு. நான் மட்டும் இல்ல. ஆயிரமாயிரம் அண்ணன் தம்பிங்க உக்கிரமும் ஒப்பாரியுமா கதறியிருக்கோம். இதையும் மீறி காங்கிரஸ் கட்சி ஒரு இடத்தில் வென்றாலும் நமக்கு அவமானம்டா தம்பி. அதான் இருப்புக் கொள்ளலை" பெரு வலியோடு பிரசவத்துக்குத் துடிக்கும் ஒரு தாயைப் போல் என் காத்திருப்பைச் சொல்கிறேன்.



எதிர்முனையில் சத்தம் போட்டுச் சிரித்த அந்த தம்பி, "கருணாநிதி, ஜெயலலிதா கூட இந்த நேரத்தில் நிம்மதியா தூங்கிட்டு இருப்பாங்க. உங்க அளவுக்கு பதற்றமா இருக்க மாட்டாங்க. நிம்மதியா படுங் கண்ணே..." என்கிறான். தொடர்பைத் துண்டிக்கும் வரை அவனுடைய சிரிப்புச் சத்தம் கேட்கிறது.

அண்ணனின் சிரிப்பும் என் அன்பு மாமரத்தின் அசைவும் என்னை மர நாற்காலியிலேயே உறங்க வைக்கின்றன.

"அண்ணே..."

நான்கு மணி வரை விழித்திருந்தவன் எப்படி கண் அசந்தேன்?

மணி காலை 7.30 குளித்துவிட்டு தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்கிறேன். தம்பிகள் புடை சூழ நிற்கிறார்கள்.

8,9,10 என கடிகார முட்கள் சுழலச் சுழலத்தான் எனக்கொரு உண்மை புரிந்தது. நான் மட்டும் அல்ல.... நாடி நரம்புகளில் தமிழன் என்கிற அடையாளத்தைச் சுமக்கும் அத்தனை பேரும் இன்றைய விடியலுக்காக தவிப்போடுதான் காத்திருந்திருக்கிறார்கள்.

சாதிமதக் கூறுகளைக் கூறுபோட்டுவிட்டு தமிழன் என்கிற சங்கிலிக்குள் ஒன்று திரண்டு காங்கிரஸின் சங்கறுக்க எல்லோரும் காத்திருந்தார்கள் என்பதுதான் உண்மை.

நடந்து முடிந்தது எல்லோருக்கும் தேர்தல் களம். ஆனால் நமக்கு அது யுத்தம் களம். நாம் வீழ்த்தியது காங்கிரஸ் என்கிற கட்சியை அல்ல. ஆண்டாண்டு காலமாக தமிழனின் தலையில் மிதித்த கொடூர சக்தியை. காங்கிரஸின் செவிட்டில் அறைய அப்போதே தடி எடுத்தவர் தந்தை பெரியார். 'காங்கிரஸ் ஒரு நாசகார சக்தி' எனச் சொல்லி வேரறுக்க கங்கணம் கட்டியவர் அண்ணல் அம்பேத்கர். தேசத்துக்கு விடியலை வாங்கிக் தந்த அண்ணல் காந்தியே 'காங்கிரஸ் இனியும் தொடர்வது நாட்டுக்கு நல்லது அல்ல?' என்றுதான் முழங்கினார். பேரறிஞர் அண்ணா காங்கிரஸை ஒழிப்பதையே கனவாகக் கொண்டார். ஆனால் அண்ணாவின் தம்பிகள் அதே காங்கிரஸுடன் கைகுலக்கி நின்றார்கள்.

அண்ணாவின் தம்பிகள் செய்யத் தவறியதை அண்ணாவின் பேரப்பிள்ளைகள் இந்த அன்னை மண்ணில் நிகழ்த்திக் காட்டி இருக்கிறோம். சின்னத்தைத் தூக்கி வீசிவிட்டு எண்ணத்தில் ஒருமித்து நின்றதால்தான் இந்த வெற்றி! பணத்தை வீசினால் இனத்தைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கமாட்டார்கள் என தமிழர்களைத்தரக் குறைவாக நினைத்தவர்களுக்கான தண்டனை.

உறவுகளைக் கருவறுத்தவர்களின் முகத்தில் நாங்கள் உமிழ்ந்த எச்சில்! கையறு நிலையில் கதறியவர்கள், வெறும் விரல்களாலேயே வீழ்த்திக் காட்டிய விந்தை! மொத்தத்தில் சாதுவின் மிரட்சி... சாய்க்கப்பட்டவர்களின் புரட்சி!

முதல் சுற்றிலேயே எதிரியின் முகத்தைப் பிளந்துவிட்டோம். உறவுகளே... காயங்களையும் தழும்புகளையும் மட்டுமே தாங்கி வளர்ந்தவர்கள் முதல் முறையாய் திருப்பி அடித்திருக்கிறோம்.

தமிழனின் சக்தி உச்சந்தலை ஆணியாய் காங்கிரஸை உலுக்கி இருக்கும் நிலையில் உங்களோடு நிறையப்பேச நினைக்கிறேன் உறவுகளே...



இந்த நேரத்தில் அண்ணன் காசி ஆனந்தனின் வரிகள் என் நெஞ்சுக்குள் உருமியாய் முழங்குகின்றன.



*இருப்பாய் தமிழா நெருப்பாய்!*
*இருந்தது போதும் இதுவரை செருப்பாய்!*
*கைவிலங்கு நீ சுமந்தாய் இதற்கோடா*
*கருவில் உன்னைத் தாய் சுமந்தால்?*
*--இனப்போர்*
*செய்யக் களம் வாடா, கொடுமை தூள்படும்*
*சிறுத்தை உன் கண்கள் சிவந்தால்*
*இருப்பாய் தமிழா நெருப்பாய்*

என்கிற வார்த்தைகளை என் தொடருக்குத் தலைப்பாக வைத்திருப்பது /ஏன் தெரியுமா?


நெருப்பு ஒன்றுதான் எதனோடு சேர்ந்தாலும் அதன் சுயத்தை இழக்காமல் இருக்கும்.

நெஞ்சுக்கூட்டுக்கு நெருப்பு வைத்து மரித்த தமிழர்களின் வயிற்றில் தரித்த தமிழர்களாக நாம் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. நெருப்பாய் தகிக்கிறது

(பொறி பறக்கும்)

# அல்கொய்தா தீவிரவாதிகளை முழுமையாக தோற்கடிக்கும் வரை ஓய மாட்டோம்

## ஒபாமா சூளுரை



முற்றிலும் தோற்கடிக்கும் வரை அல்கொய்தா தீவிரவாதிகள் மீது அமெரிக்கா கருணை காட்டாது என ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக அறிவித்துள்ளார். மின்னசோடாவில் உள்ள மின்னோபோலீஸ் நகரில் அமெரிக்க இராணுவத்தின் 93ஆவது மாநாட்டில் ஒபாமா கலந்து கொண்டு பேசினார். அப் போது அவர் கூறியதாவது,

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா மீது தாக்குதல் நடத்திய அல்கொய்தா தீவிரவாதிகளின் தலைவர் ஒசாமா பின்லேடனை கொன்று நமது இராணுவம் வரலாற்றுச் சாதனை படைத்தது. இருந்தும் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தை முழுமையாக தோற்கடிக்கும் வரை ஓயமாட்டோம். அதுவரை அவர்கள் மீது கருணை காட்ட முடியாது. தொடர்ந்து தாக்குல் நடத்துவோம்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக நமது இராணுவம் அங்கு வரலாற்று சிறப்பு மிக்க நீண்ட போரை நடத்தி வெற்றி பெற்றுள்ளது. அது விரைவில் முடிவுக்கு வர உள்ளது.

அமெரிக்க வீரர்களின் சேவை மற்றும் தியாகத்தின் மூலமே இந்தச் சிறப்பு மிக்க சாதனையை ஏற்படுத்த முடிந்தது. அமெரிக்கா மீது தாக்குதல் நடத்திய அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு தலிபான்கள் ஆதரவு அளித்ததால்தான் ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் தான் அந்நாட்டு மக்கள் தீவிரவாதிகளிடம் இருந்து விடுதலை பெற்றுள்ளனர். இதே நிலையில் தான் ஈராக்கிலும் அமெரிக்க படை முகாமிட வேண்டிய நிலை உருவானது. பாலைவனத்தை ஊடுருவி சென்று சர்வாதிகாரியை (சதாம் உசேன்) அகற்றினார்.

தற்போது அங்கு தீவிரவாதம் மற்றும் வன்முறை குறைந்துள்ளது. ஈராக் விரைவில் அந்நாட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும். தற்போது ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்க படை பயிற்சி அளித்து வருகிறது. அங்கிருந்து அடுத்த ஆண்டில் 33 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் மீளப் பெறப்பட்டு தாயகம் திரும்புவார்கள் என்றார். (ஸ்ரீ-2)

# இஸ்ரேலின் போர்க்கப்பல்களால் எகிப்து எல்லையில் பதற்றம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - எகிப்து எல்லைப் பகுதியில் பாலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் இரண்டு போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


கடந்த 18ஆம் திகதியன்று இஸ்ரேல்- எகிப்து எல்லைப் பகுதியான காசாப் பகுதியில் நடந்த வான் தாக்குதலில் 6 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பழிக்குப் பழியாக இஸ்ரேல் நிலைகள் மீது பாலஸ்தீனியர்கள் நடத்திய பதிலடி தாக்குதலில் 8 இஸ்ரேலியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனால் இஸ்ரேல்- எகிப்து பகுதியில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் எகிப்தின் செங்கடற் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் இருபோர்க்கப்பல்களை நிறுத்தியுள்ளதாக ஏ.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் உள்துறை அமைச்சர் மெட்டன் வில்னாய் கூறியதாவது,

இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த பாலஸ்தீனியர்களின் சில பயங்கரவாத அமைப்புக்கள், எகிப்து செங்கடல் பகுதி வழியாக சினாய் பகுதியில் ஊடுருவ முயற்சி செய்கிறது. இதனை எகிப்தும் கண்டுகொள்வதில்லை.

எனினும் பதிலடி கொடுக்க இஸ்ரேலும் தயாராகிவிட்டது. இதன் முன்னோட்டமாக இரு போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. எந்தநேரமும் தாக்குதல் நடத்த இராணுவ வீரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றார். இஸ்ரேலின் இந்தச் செயல் 1979 ஆம் ஆண்டு இஸ்ரேல்- பாலஸ்தீனம் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தினை மீறியதாகும் என எகிப்து கூறியுள்ளது. (ஸ்ரீ-2)




# அல்கொய்தா அமைப்புக்கு பெண் தீவிரவாதிகள் தெரிவு

## விக்கிலீக்ஸ் தகவல்

(மெல்போர்ன்)

பல நாட்டின் இரகசியங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இப்போது அல்கொய்தா அமைப்பு 6 பெண் தீவிரவாதிகளை தெரிவு செய்யப் போவதாக தகவல் வெளியிட்டுள்ளது. இவர்களில் 4 பேர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் இங்கிலாந்து நாட்டவர். மற்றொருவர் பிலிப்பினோவைச் சேர்ந்தவர்.

அவுஸ்திரேலியாவில் இருந்து மொத்தம் 23 பேரை தெரிவு செய்ய முடிவு செய்துள்ளது. இவர்களில் 6 பேர் பெண்கள் ஆவார்கள். அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு மற்றும் அமெரிக்க வெளிவிவகாரத்துறை அரேபியன் பெனின்சுலா பகுதியில் உள்ள அல்கொய்தா அமைப்பு ஆகியவற்றுக்கிடையே நடந்த தகவல் பரிமாற்றத்தின் அடிப்படையில் இந்த தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.இதன்மூலம் அல்கொய்தா அமைப்பு எதிர்காலத்தில் பெண் தீவிரவாதிகளை தாக்குதலுக்கு பயன்படுத்த முடிவு செய்துள்ளது.


இது தொடர்பாக கான்பெராவில் உள்ள அமெரிக்க தூதரகம் கடந்த ஜனவரி மாதம் இரகசியமாக அமெரிக்க புலனாய்வு அமைப்புக்கு இரகசிய தகவல் அனுப்பி உள்ளது.

இந்தத் தகவல் உலகம் முழுவதும் உள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் பொருளாதார நிலையைக் கையாள்வதில் அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிளவு குறித்தும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல் அடிப்படையில் அல்கொய்தா அமைப்பு தேர்வு செய்துள்ள 23 பேர் பட்டியலை அவுஸ்திரேலியா அமெரிக்காவுக்கு அளித்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் விசா அளிப்பது குறித்து கண்காணிக்குமாறு எச்சரித்துள்ளது.

இதையடுத்து இவர்களில் 11 பேர் அமெரிக்காவில் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 12 பேர் கண்காணிப்புடன் அமெரிக்காவில் பயணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டின் இரகசியங்களை வெளியிட்டதற்காக விக்கிலீக்ஸ் இணையதளத்திற்கு அவுஸ்திரேலிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. இது நாட்டின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளது. (ஸ்ரீ-2)



சீனா, பீஜிங் நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பென்க்னோ அகியுனோ (இடது) அந்நாட்டு ஜனாதிபதி ஹூஜின்டாவோ (வலது) வை சந்திப்பதைப் படத்தில் காணலாம்.

# டிரிபோலியில் ஈத் பெருநாள் கொண்டாட்டம் கடாபி இல்லாததால் மகிழ்ச்சி தாண்டவம்

(டிரிபோலி)

லிபிய தலைநகர் டிரிபோலியில் உள்ள தியாகிகள் சதுக்கத்தில் நேற்று முன்தினம் அந்நாட்டு மக்கள் கூடி ஈத் பெருநாளை மகிழ்ச்சியுன் கொண்டாடினர். கடந்த 41 ஆண்டு கால அடக்குமுறை ஆட்சி ஒழிந்ததால் இந்தப் பெருநாள் மேலும் மகிழ்ச்சி அளித்ததாக தெரிவித்தனர்.

இதற்கிடையில் இடைக்கால அரசின் நான்கு நாள் கெடுவை கடாபி நிராகரித்துள்ளார்.

டிரிபோலியில் கடாபி இருந்த போது கிரீன் சதுக்கம் என அழைக்கப்பட்ட சதுக்கம் எதிர்ப்பாளர்கள் கைப்பற்றிய பின் பழைய பெயரான தியாகிகள் சதுக்கம் என்று பெயர் மாற்றப்பட்டது.

நேற்று முன்தினம் ஈத் பெருநாளை முன்னிட்டு அச்சதுக்கத்தில் நகரின் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து தொழுகை நடத்தினர். இந்த பெருநாளில் கடந்த 41 ஆண்டுகளாக லிபியாவை ஆண்ட கடாபி இல்லாதது அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளித்ததாக தெரிவித்தனர்.

கடந்த 41 ஆண்டுகளில் இந்த நாள் தான் மிகவும் மகிழ்ச்சிகரமான நாள். அடக்குமுறை ஆட்சி ஒழிந்ததை சந்தோஷமாக கொண்டாடுவதற்காக இங்கு வந்துள்ளோம் என ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தலைமறைவாக உள்ள கடாபியின் செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில்,

இறையாண்மை உள்ள ஒரு நாடு ஆயுதக் கும்பல் ஒன்றின் கெடுவை ஏற்காது.

இடைக்கால அரசு அமைப்பது குறித்து கடாபி தன் மகன் சாடி மூலம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

லிபியாவில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. தனது அமைதி படையைக் கொண்டு வருவது குறித்து ஐ.நா.வுக்கான லிபியா துணைத் தூதர் இப்ராகிம் டப்பாசி கூறுகையில்,

லிபியாவல் நடப்பது உள்நாட்டு சண்டையோ இரு பிரிவினருக்கிடையிலான மோதலோ அல்ல. சர்வாதிகாரத்துக்கு எதிராக மக்கள் தொடுத்துள்ள போர். அதனால் லிபிய விவகாரம் சிறப்பு வாய்ந்த தனியான



விவகாரம். இங்கு ஐ.நா. உள்ளிட்ட எந்த ஒரு அந்நியப் படைகளையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றார்.

லிபியாவில் அரசு இயங்குவதற்கு நிதி தேவைப்படுவதால் பிரிட்டனில் முடக்கி வைக்கப்பட்ட கடாபியின் சொத்துக்களில் 1.55 பில்லியன் டொலர் பணத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விடுத்துள்ளது.

எனினும் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியில் முடக்கி வைக்கப்பட்டுள்ள 8.6 பில்லியன் டொலர் சொத்துக்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. (ஸ்ரீ-2)

# வெள்ளை மாளிகை முன் போராட்டம் நடத்தியவர் கைது

அமெரிக்காவில் ரூ.70 இலட்சம் டொலர் மதிப்பில் பெற்றொல் குழாய் பதிக்கும் திட்டத்தால் சுற்றுப்புற சூழலில் பாதிப்பு ஏற்படும் என கோரி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை அருகே நடிகரும் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு ஆர்வலருமான டர்யல் ஹன்னாக் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

இதைத் தொடர்ந்து அவரை அமெரிக்க பார்க் பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் அவர் 100 டொலர் அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (ஸ்ரீ-2)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் : 05.09.2011 திங்கள்
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் பட்டதாரிகள் கலந்துகொள்ளலாம்
வார வகுப்பு - 1 மாதம் சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# முதல்வருக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி மூவரையும் காக்க ஜெயலலிதா முன்வரவேண்டும்

## கருணாநிதி தெரிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மூவ ருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை யை ஆயுள் தண்டனையாகக் குறைக்க சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினா லும் அந்த விடயத்தில் தனக்கு அதிகாரம் இல்லை என்று முதல்வர் ஜெயலலிதா தட்டிக் கழிக் கத்தான் எண்ணுகிறார் என்று தி.மு.க தலை வர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனக்கு அதிகாரம் இல்லை என்று யாரோ சொன்னதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு காலம் கடத்தாமல் தூக்குத் தண்டனை விதிக் கப்பட்டுள்ள மூவரையும் காப்பாற்ற ஜெய லலிதா முன்வரவேண்டும் என்றும் கருணா நிதி கூறியுள்ளார்.


இது தொடர்பாக கடந்த புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், சாந்தன், முருகன், பேறிவாளனின் தூக்குத் தண்ட னையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 161இன் கீழ் மாநில முதல்வருக்கும் ஆளுநருக்கும் அதி காரம் இல்லை என்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஆனால் தூக்குத் தண்டனைக் கைதிக ளுக்காக உயர்நீதிமன்றத்தில் ராம் ஜெத் மலானியோடு இணைந்து வாதாடிய மூத்த வழக்குரைஞர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான அதிகா ரம் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 161 இன்படி முதல்வருக்கு இருக்கிறது என்று கூறியிருக் கிறார்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின் னர் காப்பாற்றப்பட்ட இடதுசாரி தோழர்களில் ஒருவர் தியாகு. இதுபற்றி அவர் கூறுகையில், ஒரத்தநாடு பகுதியைச் சேர்ந்த முத்து தங் கப்பா படுகொலையில் நான் உட்பட 3 பேரு க்கு 1972இல் தூக்குத் தண்டனை விதிக் கப்பட்டு உயர்நீதிமன்றமும் அதை உறுதி செய்தது. தண்டனையைக் குறைக்குமாறு ஆளுநரிடம் விண்ணப்பித்தோம். தமிழக அரசிடம் ஆளுநர் கருத்துக் கேட்டார்.

அப்போது கருணாநிதி அமைச்சரவை யைக் கூட்டி ஆயுள் தண்டனையாகக் குறைக் கலாம் என்று பரிந்துரைத்தார். அதன்படி எங்களுக்கு விதிக்கப்ப்ட்ட தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது என்று கூறியுள்ளார்.


அதைப்போல தூக்குத் தண்டனை விதிக் கப்பட்டு அதிலிருந்து காப்பாற்றப்பட்டவர் பெண்ணாடம் புலவர் கலியபெருமாள் (2007 இல் அவர் மறைந்து விட்டார்.) அவரது இளைய மகன் சோழநம்பியார் தமிழ்நாடு நக்சல்பாரி இயக்கமான மார்க்கிஸ்ட் லெனி னிஸ்ட் மாநிலச் செயலாளராக இருந்தவர் என் தந்தை கலியபெருமாள். பொலிஸ் தகவலாளி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் என அப்பாவுக்குத் தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டது.



அதை இரத்துச் செய்யக்கோரி ஒரு இலட் சம் பேரிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி 1974ஆம் ஆண்டு தமிழக ஆளுநருக்கு மனு அனுப்பப்பட்டது. அதை அப்போது முதல் வராக இருந்த கருணாநிதிக்கு ஆளுநர் அனுப்பினார். அது குறித்த அமைச்சரவை யில் விவாதித்த கருணாநிதி தண்டனையைக் குறைக்கலாம் என்று ஆளுநருக்குப் பரிந்து ரைத்தார். அதையடுத்து என் அப்பாவின் தூக்குத் தண்டனைஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது என்று தனது அறிக்கையில் கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மூவரும் விடுதலையாகும் வரை போராட்டம் ஓயாது

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகி யோர் விடுதலையாகும் வரை போராட்டம் ஓயா[illegible]ன்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கூறி னார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேறறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

இந்தத் தீர்ப்பு வந்ததையடுத்து பழ. நெடுமாறன் செய்தியாளர்களிடம் பேசுகை யில், மூவரின் மரணதண்டனைக்கு இடைக் காலத் தடையை நீதிமன்றம் வழங்கியிருக் கிறது.

20 ஆண்டுகாலமாக நாம் தொடர்ந்து நடத்திவரும் இந்த நீண்ட நெடிய போராட்டத் தில் முதற்கட்ட வெற்றி கிடைத்திருக்கிறது.

சட்டப் பேரவையிலும் இன்று மரண தண் டனைக்கு எதிரான தீர்மானம் ஏகமனமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாம் தொடர்ந்து மக்கள் இயக்கத்தை கட்டவேண்டும். தொட ர்ந்து போராட வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

இந்த மூவரம் விடுதலையாகும் வரை நம்முடைய போராட்டம் ஓயாது, ஓயாது, ஓயாது என்றார். (ஸ்ரீ-2)




தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்க கிண்டி ராஜ்பனுக்கு வருகைதந்த ஆந்திர மாநிலமுன்னாள் முதல்வர் ரோசய்யாவுக்கு பூங்கொத்து கொடுத்து தமிழக சபாநாயகர் ஜெயக்குமார் வரவேற்பதையும் அருகில் முதல்வர் ஜெயலலிதா, தலைமை நீதிபதி இக்பால் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## பாரதச் செய்திகள்

# தனித்தனி அறைகளிலிருந்து மூன்று பேரும் விடுவிப்பு

தூக்குத் தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டதால் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரும் தனி அறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக் கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முரு கன், சாந்தன், பேறறிவாளன் ஆகிய மூவரது கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்த தையடுத்து மூவருக்கும் எதிர்வரும் 9 ஆம் திகதி தூக்குத்தண்டனை நிறைவேற்றுவதற் கான ஏற்பாடுகள் நடந்து வந்தன.

இதை எதிர்த்து மூவரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததை யடுத்து எட்டு வாரங்களுக்கு தூக்குத் தண் டனையை நிறுத்தி வைக்க நீதிபதிகள் உத்தர விட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் நகல் நேற்று முன் தினம் காலை 11 மணிக்கு வேலூர் மத்திய ஆண்கள் சிறைக்கு அனுப்பப்பட்டது.

இதையடுத்து தனித்தனி அறைகளில் இருந்த மூவரும் அங்கிருந்து விடுவிக்கப் பட்டு ஏற்கனவே தங்கியிருந்த அறைகளில் அடைக்கப்பட்டனர்.

சிறைச்சாலை வளாகத்தில் அவர்கள் நடந்து செல்லவும் தொலைக்காட்சி பார்க்க வும், பத்திரிகை படிக்கவும் அனுமதிக்கப் பட்டனர். அவர்கள் மூவரும் நேற்று முன் தினம் சிறையில் உள்ள ஆஞ்சநேயர் கோவில், சாய்பாபா கோவில்களுக்குச் சென்று சுவாமி கும்பிட்டனர்.

பின்னர் ரம்ழான் பண்டிகையையொட்டி வழங்கப்பட்ட கோழிப் பிரியாணியை மூவ ரும் ஆவலுடன் வாங்கிச் சாப்பிட்டதாக சிறைத் துறையினர் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## மரணதண்டனையை இரத்துச் செய்க!

# இந்திய ஜனாதிபதியிடம் கனேடிய தமிழர் பேரவை வேண்டுகோள்

ராஜீவ்காந்திகொலை வழக்கில் குற்ற வாளிக ளான பேறறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருடைய மரண தண்டனை செப் டெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு நிர்ணயிக்க ப்பட்டதும் பின்னர் கடந்த 30ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றம் இத்தண்டனை க்கு இடைக் கால நிறுத்தல் உத்தரவு வழங் கியதும் தெரிந்ததே.

இந்த இடைக்கால நிறுத்தல் உத்தரவின் பிரகாரம் குற்றவாளிகளின் கருணை மனுவை ஏன் இந்திய ஜனாதிபதி 11 ஆண்டு காலமாக தீர்மானம் எதுவும் எடுக்காமல் தடுத்து வைத் திருந்தார் என அடுத்த எட்டு வாரங்களுக்குள் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள் ளது.

இதனையடுத்து மேற்படி மரணதண்ட னையை முற்றுமுழுதாக இரத்துச் செய்ய வேண்டும் என இந்திய ஜனாதிபதி திருமதி பிரதீபா பட்டீலுக்கு ஒரு உருக்கமான வேண்டு கோளை கனேடியத் தமிழர் பேரவை கடித மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

மரணதண்டனைக்கெதிரான கனடா நாட் டின் கொள்கையையும் ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தினர் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆழமான எதிர்ப்பையும் மேற் கோள் காட்டியுள்ள இக்கடிதம் இந்தியாவின் பாரம்பரியம்கூட மரணதண்டனைக்கு எதிரான தென ஆதாரங்களுடன் விளக்கியுள்ளது.

இந்திய நாட்டின் கடைசி மரணதண்டனை ஏழு வருடங்களுக்கு முன்னரேயே மேற் கொள்ளப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இந்திய ஜனாதிபதி ஒருவருக்கு மட்டும் தான் மரணதண்டனையை ஆயுள் தண்ட னையாக மாற்றும் அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரத்தின் முக்கியத்துவத்தையும் வலிமை யையும் வலியுறுத்தியுள்ள கனேடிய தமிழர் பேரவையின் இக்கடிதம் இந்திய ஜனாதிபதி திருமதி பிரதீபா பட்டிலீன் கருணை மீள் பரி சீல்னையில் முக்கிய இடம் வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# யாழ்.குடாநாட்டில் மீண்டும் டெங்குநோய் அச்சுறுத்தல்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த வாரத்தில் டெங்குநோய் தீவிரமாகப் பரவியதையும் பலர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டதையும் 27 பேர் இதனால் பலியானதையும் நாம் மறந்திருக்கமாட்டோம். டெங்குநோய் பரவிய வேளையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் மக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தற்பொழுது மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடிய சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக

- பருவப் பெயர்ச்சி மழையின் ஆரம்பம்
- தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகை
- டெங்கு நோய் குறைவடைந்ததால் மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்வின்மை
- டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் சூழலுக்கான இசைவாக்கம்
- டெங்கு நோயின் தனித்துவமான பரவுகின்ற மற்றும் ஆபத்தை விளைவிக்கும் தன்மை.
- முன்னேற்றமடைய வேண்டியுள்ள நகர்ப்புறங்களிலுள்ள கழிவுப் பொருள் மற்றும் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் இறுதியகற்றல் முகாமைத்துவம்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தற்பொழுது குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பருவ மழையின் தூறல்கள் ஆரம்பித்துள்ளன. அத்துடன் எமது சுற்றாடல் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான நீர் தேங்கக்கூடிய இடங்களும் கவனிக்கப்படாமல் உள்ளன.அத்துடன் எமது வீட்டுப் பீலிகளில் சருகுகள் சேர்ந்து அடைப்பட்டுள்ளதால் மழை நீர் தேங்கி நிற்கக்கூடியதாகவுள்ளது. இடையிட்டுப் பெய்யும் மழையின் போது இவ்வாறான இடங்களில் சிறிதளவில் நீர் தேங்கி நிற்கும் போது ஏற்கனவே இடப்பட்டிருந்த அல்லது புதிய முட்டைகள் இடப்பட்டு டெங்கு நுளம்புகள் அதிகளவில் பெருக்கக்கூடிய ஆபத்து உள்ளது. இந்த நுளம்புகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு நீரே முட்டையிட்டு பெருக்கமடைய போதுமானதாகும்.

பாடசாலைகளின் விடுமுறை காலம் மற்றும் எமது பிரதேச ஆலயங்களின் உற்சவ காலத்துடன் டெங்கு நோய் அதிகமாகவுள்ள தென்பகுதியிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்ததனாலும் எமது பகுதியில் டெங்கு நோய் பரப்பக்கூடிய நுளம்புகளின் செறிவு அதிகரித்துக் காணப்படுவதாலும் டெங்கு நோயின் பரவல் தற்போது அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்து காணப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த டெங்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வு நிலை குறைவடைந்துள்ளது.

அத்துடன் டெங்குநோய் அதிகளவில் பரவிய காலப்பகுதியில் பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் இடம்பெற்றுவந்த டெங்குக் கட்டுப்பாடு நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட பின்னடைவுகளும் மக்கள் உடனடி சிகிச்சை பெறுவதில் காட்டுகின்ற கரிசனையற்ற தன்மையும் மீண்டும் டெங்குநோய் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையிலிருந்து மீண்டும் கட்டுப்படுத்துவதற்கு கடினமான அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான நிலைமைக்கு அடித்தளமிட்டுள்ளது.

டெங்குநோயைப் பரப்புகின்ற நுளம்புகள் முன்னர் பெருக்கமடைந்த சிறிய நீர் தேங்கக்கூடிய இடங்கள் சுற்றாடலில் இல்லாதவிடத்து எமது கண்காணிப்புக்குட்படாத அடைபட்டுள்ள பீலிகள், குளியல் தொட்டிகள் , நீர்த் தொட்டிகள், பாவனை குறைந்த ஆழம் குறைவான கிணறுகள், நீர்த் தாங்கிகள் போன்றவற்றில் பெருக்கமடைவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே எமது சூழலில் இவ்வாறான இடங்களையும் எமது கண்தாணிப்புக்குட்படுத்தாவிடின் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக்கமடைவதை கட்டுப்படுத்துவது கடினமாகும். அத்துடன் இந்த நுளம்பின் முட்டைகள் ஆறு மாதகாலம் வரை நீரின்றி குறிப்பிட்ட நீர் தேங்கக்கூடிய இடங்களில் ஒட்டியவாறு உயிரோடிருந்து மீண்டும் நீர் வரும் வேளையில் பொரிக்கக்கூடியவை. எனவே நீரை அதிகளவில் சேமித்து வைத்திருக்கும் இடங்களை நீரை வெளியேற்றி வாரத்துக்கொரு தடவையானது நன்றாக உரஞ்சிக் கழுவுதல் வேண்டும். அத்துடன் இந்த நுளம்புகள் எமது சுற்றாடலிலுள்ள சிறிய புதர்கள் போன்ற குளிர்ச்சியான பகுதிகளிலேயே அதிகமாக தங்குகின்றன. எனவே வீட்டுச் சுற்றாடலிலுள்ள இவ்வாறான பகுதிகள் அகற்றப்பட வேண்டும்.

டெங்கு நோயைப் பொறுத்தவரை அதனை இலகுவில் உறுதி செய்து கொள்வது கடினம். பெரும்பாலும் திடீரென ஏற்படுகின்ற கடுமையான காய்ச்சல்,தலைவலி தசை மற்றும் மூட்டு வலி, வாந்தி மற்றும் கண்களில் வலி போன்றவை பொதுவான அறிகுறிகளாகவுள்ளன.

இவ்வாறான அறிகுறிகள் ஏனைய நோய்கள் பலவற்றுக்கும் பொதுவானவை. இவ் அறிகுறிகளைத் தொடர்ந்து நோய் இயல்பாகவே குணமடைந்ததைப் போல் உணரப்பட்டாலும் அது ஒருவரை திடீரென உயிராபத்தை விளைவிக்கக்கூடிய டெங்கு அதிர்ச்சி நிலைக்கு இட்டுச் செல்ல முடியும்.

எனவே டெங்கு நோய் பரவுகின்ற காலப் பகுதியில் ஏற்படுகின்ற காய்ச்சல் தொடர்பில் மிகுந்த ஆலோசனை பெறுவதும் முக்கியமானமாகும். இக்காலப்பகுதியில் பரசிற்றமோல் வகை தவிர்ந்த அஸ்பிரின், புருபன், டைக்குளோபெனக், சோடியம் போன்ற மாத்திரைகள் பாவிப்பதை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். இந்த வகை மாத்திரைகள் குருதிப்பெருக்கு நிலையை ஊக்குவிக்கக்கூடியவை. டெங்கு காய்ச்சல் அல்லது டெங்கு பரவும் காலப்பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டுக் குணமடைந்தவர்கள் ஒருவார காலப்பகுதிக்காவது பாடசாலை, வேலைக்குச் செல்லாது பூரணமான ஓய்வெடுத்துக் கொள்வது அவசியமாகும்.

டெங்கு நோயானது நான்கு வகையான கிருமிகளால் ஏற்படுத்தப்படுகிறது. இவற்றில் ஒரு வகையான கிருமியால் நோய்க்குள்ளான ஒருவருக்கு மீண்டும் வேறு வகையான கிருமி தொற்றுமானால் மிக மோசமான பாதிப்பை அல்லது மரணத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அவருக்கு டெங்கு நோய் ஏற்படலாம். ஏற்கனவே டெங்குநோய் அறிகுறிகள் எதுவுமின்றி ஏற்பட்ட ஒருவருக்கும் இந்நிலை ஏற்பட முடியும்.

யாழ்.குடாநாட்டில் கடந்த வருடத்தைப் போல மீண்டும ஒரு டெங்குப் பரம்பல் ஏற்படுமானால் அதிக தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

தற்போது எமது உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர். எமது பிரதேசங்களின் சந்தைப் பிரதேசங்கள், நகர்ப்பிரதேசங்கள் மற்றும் நெருக்கமான குடியிருப்புப் பிரதேசங்களில் பிளாஸ்டிக், பொலித்தீன் மீள்சுழற்சிக்கான பொருட்கள் மற்றும் குடிமனைக் கழிவுப் பொருட்கள் கிரமமாக அகற்றப்படுவதிலும் இறுதியகற்றலிலும் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன.

அத்துடன் கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் மழைநீர் வடிகால்களும் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள இவ்வாறான நிலைமைகள் டெங்கு நோய்ப் பரம்பல் ஏற்படுகின்ற காலப்பகுதிகளில் எப்போதுமே எமக்கு அச்சுறுத்தலாகவே இருந்து வந்திருக்கின்றன. எனவே இவை தொடர்பில் எடுக்கப்படுகின்ற காத்திரமான முன்னேற்ற செயற்றிட்டங்கள் நீண்டகால நோக்கில் டெங்கு நோய்க்கட்டுப்பாட்டில் பயனுறுதியுடையவையாக அமையும்.

**சி.பிரணவன்,**
**சுகாதார கல்வி உத்தியோகத்தர்**

எனவே மீண்டும் நிர்வாகம் மற்றும் சமூகத்தின் அனைத்து மட்டங்களில் உள்ளவர்களும் டெங்கு நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் தத்தமது பங்கினை உணர்ந்து டெங்குக் கட்டுப்பாட்டு ஜனாதிபதி செயலணிக் குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக செயற்பட்டு யாழ். குடாநாட்டில் ஏற்படக்கூடிய டெங்கு நோய்ப் பரம்பலை தவிர்க்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# வன்னியில் கடும் வரட்சி; குடிநீருக்கு தட்டுப்பாடு


(கொழும்பு)

வன்னியின் பல பகுதிகளிலும் கடும் வரட்சி நிலவி வருவதால் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அங்குள்ள மக்கள் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோடைக்கால வரட்சியின் காரணமாக கிணறுகளில் நீர் வற்றியுள்ளது. இதனால் நீருள்ள ஆழமான கிணறுகளை நோக்கி மக்கள் தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் பௌசர் மூலமான குடிநீர் விநியோகத்திலும் குறைபாடுகள் நிலவுகின்றன.

தட்டுவன்கொட்டி, தருமபுரம், பூநகரி, வெள்ளாங்குளம், வலைப்பாடு, முழங்காவில், முட்கொம்பன், அக்கராயன், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


சில பகுதிகளில் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை பிரதேச செயலகங்களும் படையினரும் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் மக்களுக்கான குடிநீர்ப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட யோசனைகள் தொடர்பில் கட்டட நிர்மாணத்துறையினரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச, அநுர பிரியதர்சன யாப்பா, மஹிந்த அமரவீர, பசில் ராஜபக்ஷ, நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில்

# கடலுக்கு அடியிலான மின்திட்டம் குறித்து இதுவரை எந்த முடிவும் இல்லை



## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடலுக்கு அடியிலான மின் இணைப்பை ஏற்படுத்தும் திட்டம் குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று மின் சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் காரணமாக இந்தியா இந்த விவகாரம் குறித்து முடிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கடலுக்கு அடியிலான மின் இணைப்பை உருவாக்குவது குறித்த சாத்திய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் சேது சமுத்திரத் திட்டம் காரணமாக இது பற்றி இந்தியா இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சேதுசமுத்திரத்திட்டம் நிறை வேற்றப்படுமானால் கடலின் மிக ஆழத்தில் மின் இணைப்பை உருவாக்க வேண்டும். அதற்கான செலவுகள் மிக அதிகமாக இருக்கும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சம்பூர் அனல் மின் நிலையக் கட்டமானத்திட்டம் தொடர்பான உடன்பாடு எதிர்வரும் 6 ஆம் திகதி கையெழுத்திடப்படவுள்ளதாகவும் இதற்கென இந்திய மின்சக்தி அமைச்சின் செயலர் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவு ஆரம்பம் : 05.09.2011 திங்கள்
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் பட்டதாரிகள் கலந்துகொள்ளலாம்
வார வகுப்பு - 1 மாதம் | சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

நெஞ்சில் கவலையை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை
~ பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை திரும்பும் அகதிகளுக்கு முல்லைத்தீவில் அரச காணிகள்

வடபகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவுபெறும் கடைசிக் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் மீள்குடியேற்ற அமைச்சு, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 31 முகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற பல்லாயிரக் கணக்கான மக்களை மீண்டும் பாது காப்பாக நாட்டுக்கு அழைத்து வந்து, மீள்குடியேற்று வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

யுத்தம் காரணமாக இந்த இலங்கைத் தமிழர்கள் கடந்த பலவருடங்களாகத் தங்கள் குடும்பத்துடன், தோணிகளில் சட்டவிரோதமாகவும், சட்டபூர்வமாகவும் இந்தியாவுக்கு பாதுகாப்பை தேடிச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது யுத்தம் முடிபடைந்து நாட்டில் மீண்டும் அமைதியும் சமாதா னமும் திரும்பிக் கொண்டிருப்பதனால் அவர்கள் இலங்கை திரும்பி தங்கள் உறவுகளுடன் ஒன்றிணைந்து வாழ இப்போது அவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒன்றிணைக்கப்பட்ட வலையமைப்பின் கீழ் இந்தத் தகவல்கள் பெறப்பட்டன. மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உத்தல பஸ்நாயக்க, புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானி கராலயத்தின் ஊடாக தமிழ்நாட்டு முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் இங்கு அழைத்து வருவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருவதாகக் கூறினார்.

இந்த மக்கள் இலங்கை திரும்புவதற்கு தேவையான ஆவணங்களை அவர்களுக்குத் தயாரபடுத்திக் கொடுத்து, அவர்களை மீண்டும் நாடு திரும்புவதற்கான வசதிகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்தானிகராலயத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. இவர்களுக்கு உடனடியாக இலங்கை திரும்புவதற்கான கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-5)

## ஆனையிறவுப் பகுதியில் மனநோய் வைத்தியசாலை கட்டப்படவேண்டும்

யாழ்ப்பாணத்தில் மர்ம மனிதர்கள் புளுத்து விட்டார்கள். இதனால் அவர்களில் ஒரு சிலரை பொதுமக்களால் பிடிக்க முடிந்துள்ளது.

நேற்று முன்தினம் கோண்டாவில் பகுதியிலும் நேற்று சுழிபுரம் பகுதியிலும் இரண்டு மர்ம மனிதர்களை பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தென்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனம் சார்ந்தவர்கள் என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்கள் என்பது உண்மையாயினும் தென் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள கிராமங்களில் தனித்துத் திரிவதை சாதாரணமான காரணங்கள் மூலம் நியாயப்படுத்த முடியாது.

இந்நிலையில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த இருவரையும் பொலிஸார் பொறுப்பேற்றிருக்கின்ற நிலையில், அவர்கள் இருவரும் மனநோயாளிகள் என்று கூறப்படுகின்றது.

அப்படியானால் தென்பகுதியைச் சேர்ந்த மனநோயாளிகள் பலர் யாழ்ப்பாணத்திற்குள் நுழைகின்றார்கள் என்று கருதவேண்டியுள்ளது.

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஒருமுறை இலங்கைக்கு வருகை தந்தபோது அவருக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்திய படையினரில் ஒருவர் தான் வைத்திருந்த துவக்கால் ராஜீவ் காந்தியைத் தாக்கினார்.

எனினும் ராஜீவ் காந்தியைத் தாக்கிய படைத் தரப்பைச் சேர்ந்த நபர் மனநோயாளி என்று கூறப்பட்டது.

பின்னாளில் அந்த மனநோயாளியும் இலங்கைப் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

ஆக! ராஜீவ் காந்தியைத் தாக்கியவர் முதல், தற்போது யாழ்ப்பாணத்தைக் கலக்கும் மர்ம மனிதன் வரை மனநோயாளிகள் எனில், நிலைமை மோசமானது என்றே கூறவேண்டும்.

எனவே இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆனையிறவு பகுதியில் மனநோயாளர் வைத்தியசாலை ஒன்றை அமைத்து தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்றவர்களை சோதனையிட வேண்டும்.

குறித்த நபர் மனநோயாளி அல்ல. அவர் மன ஆரோக்கியம் உள்ளவர் என மருத்துவ நிபுணர்கள் உறுதிச் சான்றிதழ் வழங்கிய பின்பே அவர்களை யாழ். குடாநாட்டுக்குள் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

இப்படி ஒரு கோரிக்கையை முன்வைத்தால் எப்படியிருக்கும்?

மக்களின் உறக்கத்தைக் கலைத்து அவர்களை பயப் பீதிக்கு ஆளாக்கும் மனநோய் கொண்ட மர்ம மனிதர்களை கட்டுப்படுத்துவதற்கு வேறு வழியேதும் உண்டா?

## நாட்டில் கிறீஸ் பூதம் கணினியில் அனோனிமஸ்

சைமண்டெக், அப்பிள், பேஸ்புக், மைக்ரோசொப்ட் மற்றும் பல முன்னணி அமைப்புக்களின் டீஎன்எஸ் சேவரில் கடந்த சில நாட்களாக ஊடுருவியுள்ளதாக அனோனிமஸ் கணினி ஊடுருவல் அமைப்பின் இலங்கைக் கிளையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரசுக்கு டீஎன்எஸ் விஷமாக்கல் என்று பெயரிட்டுள்ளனர். இந்த டீஎன்எஸ் விஷமாக்கல் திட்டத்தின் மூலம் இணையத் தள முகவரியினூடாகஐபிமுகவரியினைகண்டு பிடிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.


இந்த ஊடுருவல் மூலம் டீஎன்எஸ் சேவரில் எழுத்துரு வைரஸ்களை கணினியில் புகுத்தி சேவர்களில் உள்ள தகவலை மாற்றி அமைக்கவும் போலியான தகவல்களை புகுத்தவும் முடியும். அத்துடன் போலி இணையத் தளங்களை இணைக்க முடியும்எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதம் 22-ம்திகதி முதல் ஊடுருவியுள்ள இந்த வைரஸ் நேற்று தொடக்கம் ஸ்கைப் நிறுவனத்தையும் ஊடுருவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

## வெலிக்கடை சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு சந்தேக நபர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களுக்கு உரிய விளக்கமளிக்கப்பட்தன் பின்னர் அவர்கள் தாமாகவே முன்வந்து உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டதாக சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நீதிவான் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெலிக்கடை சிறைச்சாலையின் கூரை மீதேறி இந்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்


### வெங்கடேச சுப்ரபாதம்

"கௌஸல்யா சுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்"

என்று தொடங்கும் வெங்கடேச சுப்ரபாதத்தை இயற்றியவர் பிரதிவாதம் பயங்கரவாதம் அண்ணங்கராசாரியார் என்பவர். உலகைக் காத்தருளும் பகவானை அதிகாலையில் துயில் எழுப்புவதாகத் கருதி இதைப் பாடுவார்கள். பகவான் உறங்குவதில்லை. ஆனாலும் அன்பின் காரணமாக அப்படி செய்கிறோம். ஆனால் பகவான் மானிட அவதாரம் எடுத்து வந்தபோது நம்மைப் போலவே உறங்கினார். நாராயணன், இராமனாக வந்தார். அவர் விஸ்வாமித்திரருடன் சென்று தாடகையை அழித்து விட்டு மிதிலை நோக்கிச் சென்றார். அவரை அழைத்துச் சென்ற விஸ்வாமித்திரர் இராம இலட்சுமணர்களை எழுப்புவதற்காக முதலில் இதைப் பாடினாராம். அதன் அடிப்பையிலேயே பிரதிவாதம் பயங்கரவாதம் அண்ணங்கராசாரியார் இதைப் பாடியதாகச் சொல்வர். திருப்பதியில் கோயில் கொண்டுள்ள வெங்கடாஜலபதியை எழுப்புவதற்காக அவர் இதைப் பாடினார்.







## வெள்ளி நற்சிந்தனை

35

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

நாம் இறைவனுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்வது பக்தியின் முதல் நிலையாகும். அடுத்தநிலை இறைவன் எம் நெஞ்சத்திலே எழுந்த ருளி இருப்பது. பக்தியின் தொடக்கம் கோயில் வழிபாட்டில் அமைய பக்தியின் முதிர்ந்த நிலையில்உள்ளமேகோயிலாகஅமைந்து விடும். தன்னை இறைஞ்சி வழிபாடு செய்பவருடைய சிந்தையுள்ளே இறைவன் கோயிலாகத் திகழ்வான் என ஞானசம்பந்தர் பாடியுள்ளார். தன்னை நினைப்பவர் மனத்தை இறைவன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான் என அப்பர் பாடியுள்ளார்.

மணிவாசகர் தன் நெஞ்சத்தை இறை பக்தியால் வழிநடத்த விரும்புகிறார். அதனால் நெஞ்சத்தை முன்னிலைப் படுத்திச் சில நல்ல விடயங்களை அறிவுறுத்துகிறார். இறைவனுடைய பெருமையை தேவர்களும் அளந்து முடிவு செய்யும் ஆற்றல் அற்றவர்கள். ஆனால் இறைவனோ தன் அடியவ ருக்கு எளிதில் வந்து அருள் செய்யும் பெருங்கருணையாளன்.

எம்முடைய பாசங்களையெல்லாம் ஒழித்துஎம்மைஆட்கொண்டவன். உள்ளே எம்மை உருக வைப்பவன். மேலான வீடுபேற்றைப் பெறுவதற்கு நீ எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கிறாயே எனக் கண்டிக்கிறார். ஐம்பொறிகளால் நாம் செய்யும் குற்றங்களை நீக்கி இறை வழிபாட்டில் ஈடுபடவேண்டும் என்ற செய்தியை தனது நெஞ்சத்தை நெறிப்படுத்துவது போலஎல்லோருக்கும் ஒரு அறிவுரையைச் செய்கின்றார்.

தன் குற்றம் நீங்கியவனே பிறரது குற்றம் பற்றிப் பேசமுடியும். பொறி வழி நடவாமல் மனத்தைக் கட்டுப் படுத்திச் செயற்படும் பண்புநலன் மனித வாழ்வியலுக்கு இன்றியமையாதது. ஐம்பொறிகளையும் அடக்கும் ஆற்றல் கைவரப்பெறின் மனத்தை கோயிலாக்க முடியும். மணிவாசகர் நெஞ்சத்திடம் அதனையே செய்யும் படி கேட்கிறார். அவ்வாறு உள்ளக் கோயில் அமைக்க முடியாவிட்டால் இறைவன் திருவடியை வணங்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். கோயில் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமாக மொழி, கலை பண்பாட்டு முயற்சிகளின் பயிற்சிக்களமாகவும் அமைந்துள்ளது.

இறைவணைப் பற்றி நன்கு உணர்ந்தாலும் பக்தி வயப்படாமல் உலக வாழ்வியலில் ஈடுபடும் மனித மனத்தை நாம் நெறிப்படுத்த வேண்டும். வலிய வந்து இறைவன் எம்மை ஆட்கொள்வதை நாம் உணர்வதில்லை. இறையுணர்வு பெற்றபின்னரும் குற்றம் புரியும் நிலைதான் உள்ளது. இத்தகைய குற்றத்தை மணிவாசகர் பளகு என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்.


பளகை அறுக்கும் இறைவனுடைய கழல்களைப் பணிய வேண்டும். ஒருவர் குற்றம் செய்தால் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டால் அவரை மன்னிக்கும் வழக்கம் உலகியலாக உள்ளது.

பரகதி எனப்படும் வீட்டு நெறியிலே செல்வதற்கு இறைவன் நினைப்போடு வாழவேண்டும். எனவே எம்முடைய செயற்பாடுகளை எண்ணிப்பார்த்து அவற்றையெல்லாம் இறைவழிபாட்டில் செலுத்தவேண்டும். உள்குவார் உள்ளத்தை இறைவன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருப்பான் என மணிவாசகர் எமக்கு நல்வழி காட்டப் பாடியுள்ளார்.

"அளவறுப்பதற் கரியவன் இமையவர்க் கடியவர்க் கெளியான்நங்
கனவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட்கசிந்துணர்ந்திருந்தேயுங்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்செய்ததுமிலைநெஞ்சே
பளக றுத்துடையான் கழல் பணிந்திலை பரகதி புகுவானே"

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

# அல்வாய் மாறாம்புலம்
# அருள்மிகு மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தான
# புனராவர்த்தன பிரதிஷ்டா அனுஷ்டபந்தான நவகுண்டபக்ஷ
# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் -02.09.2011



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



கணங்களுக்கெல்லாம் ஈசனாக விளங்குபவரான கணேசப் பெருமான் அல்வாய் மாறாம்புலத்திலே மாணிக்கப் பிள்ளையாராக வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

இந்த அருள்மிகு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலே இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். தனக்கு மேல் வேறு தலைவனில்லாத தனிப்பெருந் தலைவராகிய மாணிக்கப்பிள்ளையாரின் ஆலயத் திருப்பணிகள் முடிவுற்று அவருடைய திருவருட் பேற்றினால் இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது ஒரு புண்ணிய கைங்கரியமாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இந்தக் குடமுழுக்கு எனப்படுகின்ற மஹாகும்பாபிஷேகம் நிகழுவது இந்த அல்வாய் மக்கள் செய்துள்ள பூர்வ ஜென்ம புண்ணிய பலனாலாகும்.

ஆகவே, இந்த அருள்மிகு மாணிக்கப்பிள்ளையாருடைய திருவருள் அடியார் பெருமக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவருடைய பாத கமலங்களைப் பணிந்து நல்லைக் குருமணியின் திருவடிகளையும் வணங்கி அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்**

## வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி


விவேகமும் கல்வியும் துணி வும் நற்பண்புகளும் சேர்ந்திணைந்த இடமொன்றாம் வடதிசையில் வசந்தம் பொங்கும் வட மராட்சி! அங்கே வடபுலத்தில் அல் வாய் பிரதேசத்தில் வீற்றிருக்கும் வினை தீர்க்கும் விநாயகனாம் மாறாபுலம் மாணிக்கப் பிள்ளையார் அவனின் மகா கும்பாபிஷேக நிகழ்வுக்கு ஆசிச் செய்தியை வழங்குவதற்கு அருள் பாலித்த ஐங்கரன் அவன் பாதம் வணங்குகின்றேன்.

அவனின்றி அணுவும் அசையாது என்று ஆன்றோர் எமக்கு அருளிய வாக்கு எத்துணை உண்மை என்பதற்கு சித்தியைத் தரும் ஆனைமுகத்தான் சிறந்ததொரு உதாரணமானான்.

பக்தி பெருகிட பரவசமாகி தம் குற்றம் குறை நீங்க வேண்டி வரும் பக்தர் தம் துயர் தீர்த்து குன்றாத புகழ் பரப்பும் பெருமானவரின். கும்பாபிஷேக வைபவம் எண் திசையும் எதிரொலித்து பாவங்கள், வினைகள் எல்லாம் பாங்குறவே நீங்கிடவே புரட்டாதி நன் நாளில் நடைபெற இருக்கும் இறைவனவன் மகா கும்பாபிஷேக வைபவம் இனிதே நடந்தேற இப் பக்தனின் நல்வாழ்த்துக்கள்!

அல்வாய் மக்களுக்கு மட்டுமல்ல அனை வருக்கும் அவன் ஆசியும் அருளும் வழங்க வேண்டும் என அவன் பாதம் தொழுது பிரார்த்திக்கின்றேன்.

**ஆ.சிவசுவாமி**
**பிரதம செயலாளர்,**
**வடமாகாணம்.**



## அடியவர் கொடுவினை தீர்த்து அருள் சுரக்கும் மாணிக்கப்பிள்ளையார்

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்திலுள்ள வடமராட்சியின் சிறுப்புறு அல்வாய் வடக்கு அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கோயில் கொண்டு எழுந்தருளி அளப்பரிய கருணையினாலும் அடியவர்களின் உதவியினாலும் இன்று(02.09.2011) ஆவணி மாதம் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிரம்மஸ்ரீ நாகேந்திர திவாகரக்குருக்கள் தலைமையில் புனராவர்த்தன பிரதீஷ்டா அஷ்ட பந்தன நவகுண்டபஷ மஹாகும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் கூடியமையிட்டு உவகை கொள்கிறோம்.

இவ்வாலயம் தோன்றுவதற்கு சிறப்பான வரலாறு ஒன்றுண்டு. இக்கிராம மக்கள் தொன்றுதொட்டு விநாயகர் வழிபாட்டில் மிகுந்த பற்றுக்கொண்டதன் காரணமாய் பிள்ளையார் கதை விரதம் இவர்களது பக்தி மேம்பாட்டினை எடுத்துக் காட்டியதன் பலனாக பிள்ளையாரே நேரில் தோன்றி பட்டபுளிய மரத்தை தளிர்க்கும் எனக்கூறி காட்சி கொடுத்தமையால் பட்டபுளியானே; மாறாம்புலத்தானே என யாவராலும் அழைக்கப்படலானார்.

மேலும் இக் கோவிலில் ஆவாகணம் செய்யும் விக்கிரகம் இந்தியாவிலிருந்து எடுத்துவரும்போது விக்கிரகம் மறைக்கப்பட்டதாகவும் கொண்டு வந்தவர் பிடிபட்டு கொழும்பு மாறை சிறையில் இருந்ததாகவும் அப்போது எம்மவர் தினமும் மாறாம்புலம் மாறாம்புலம் என்று அழைப்பதையும் வணங்குவதையும் இவரோடு சிறையிலிருந்து அவதானித்த வேதியர் ஒருவர் வினவியவேளை ஐய, எமது குல தெய்வமான பிள்ளையாரை மாறாம்புலம் எனக் குறிப்பிடுவதாகவும் அவ்வேளையில் கூறியபோது அவ்வேதியரும் பெருமான் மீது பேரன்பு கொண்டு திருப்பதிகம் பாடியதாகவும் அடுத்த சில தினங்களில் எமது ஊரவரும் வேதியரும் சிறையிலிருந்து விடுதலை பெற்று இத்திருத்தலத்திற்கு வருகை தந்து எம்பெருமானை வணங்கி பதிகத்தை கையளித்தாரென கர்ணபரம்பரைக் கதையாகவும் 1937 ஆம் ஆண்டிலே வெளியீடு செய்யப்பட்ட பதிகவரலாற்றுப் புத்தகத்திலும் பதிவாகவுள்ளது. அவ் விக்கிரகமே இன்றும் பிரதிஷ்டை செய்யப்படுவதை எண்ணி எம்மவர்கள் ஆனந்தப் பரவசம் அடைகின்றார்கள்.

இவ்வாலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாணிக்கப்பிள்ளையார் தம்மை வழிபடும் அடியவர்களின் விக்கினங்களை தீர்த்து வைத்து மேலான சிறப்புக்களை வாரிவழங்கும் வள்ளலாகவும் கருணை வடிவினராகவும் வீற்றிருந்து அருளாட்சி புரிவதனையும் கண்ணாரக்காண்கிறோம், ஆதலினால் காணுதற்கரிய எம்பெருமானின் கும்பாபிஷேக குடமுழுக்கு நன்நாளில் அடியவர்கள் அனைவரும் பக்தியுடன் மனம் மொழி மெய்யினால் வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்று நித்திய பேரின்ப வாழ்வைப் பெறுவோமாக.

## சுவாமி சித்ரூபானந்தாவின் அருள் உரை

அல்வாய், அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் 2.9.2011 இல் நடைபெறுவதையிட்டு அடியேன் பரிபூரணமாக மனநிறைவு அடைகின்றேன். இப் பூவுலகில் மக்கள் யாவரும் இறை சிந்தை உடையவராக திகழவேண்டும் என்பதே இறைவனின் புண்ணியமாகும். இப்பேறப்பட்ட வாழ்வுதான் ஈடேற்றத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் சிவன் செயல்.

**அன்னையின் அடியவன்**
**சித்ரூபானந்தா.**

## மாண்பு மிக்க மாணிக்கப்பிள்ளையாரின் திருவருள் எங்கும் பரவட்டும்!

அல்வாய்ப்பதியிலே மாறாம்புலத்திலே வீற்றிருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்ற அருள்மிகு மாணிக்கப்பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று நிகழ்வதையிட்டு இறும்பூதெய்துகின்றோம்.

தம்மை வழிபடும் அடியார்களின் வினை தீர்க்கும் பெருமானாக அல்வாயிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள்மாரி பொழிந்து கொண்டிருக்கின்ற அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று நிகழ்வது ஒரு புண்ணியப்பேறாகும்.

"பெருமானின் பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்று சம்பந்தர் தேவாரம் குறிப்பிடுவது போல இந்தக் குடமுழுக்கு நடைபெறுவது அல் வாய்ப்பதி வாழும் மாணிக்கப்பிள்ளையாரின் அருள் பெற்ற அடியார்களின் பூர்வ ஜென்ம புண்ணியப் பேறாகும்.

வினை தீர்க்கும் விநாயகர் இங்கே மாணிக்கப் பிள்ளையாராக எழுந்தருளி அடியவர்கள் அனைவரையும் விக்கினமின்றிக் காத்தருளி நல்வாழ்வு நல்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்குகின்றோம்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்துவரும்"

"அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெறுவார்களாக!" **சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன், ஆன்மீக எழுத்தாளர், சமயப் பிரசாரகர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த வடமராட்சியிலே அல்லையம்பதியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எமது முன்னோர்கள் பிள்ளையார் கோவில் அமைத்து வழிபட்டு வந்தார்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஒருங்கே அமைந்த இவ்வாலயத்தின் முந்திய கும்பாபிஷேகம் 1994 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவ்வாலயத்தின் மக்களின் அயராத முயற்சியினால் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு வர்ண வேலைகளுடன் நிர்மாணிக்கப்பட்டு திருப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் புனராவர்த்தன நவகுண்ட மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக 02.09.2011 இல் நடைபெறுகின்றது. இத் திருப்பணி சிறப்புற நடை பெறுவதற்கு வெளிநாட்டில் உள்ள எமது நண்பர்கள், உறவினர்கள் பெருநி தியை வாரி வழங்கினார்கள். அத்துடன் கும்பாபி ஷேக நிதியாக மாறாம்புலத்தைச் சேர்ந்த அல் வாய்,

திருமலை, வல்வெட்டி, கரவெட்டி ,கிளி நொச்சி மக்களும் அயலவர்களும் நிதிதந்துதவி னார்கள். மாறாம்புலப் பிள்ளையாரை நாடிவரும் பக்தர்களுக்கு நல்ல மனதையும், நற்சிந்தனையையும் அத்துடன் சகல செல்வங்களையும் பெற அருளாசி பெற வேண்டி எனது நல்லாசியை நிறைவு செய்கின்றேன்.

**தலைவர்**
**மாறாம்புல மாணிக்கப்பிள்ளையார்**
**தேவஸ்தான பரிபாலனசபை.**

# முன்னணி வீரர்கள் சொதப்பல் ஆட்டம் இலங்கை அணி பரிதாபமாக சுருண்டது

## இரண்டாம் நாள் ஆட்டத்தில் 16 விக்கெட்டுக்கள் சரிந்தன

(காலி)

முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பலானஆட்டம்வழங்கஇலங்கை அணி முதலாவது இன்னிங்சில் 105 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள அவுஸ்ரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி முதலாவது இன்னிங்சில் 273 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மைக்கல் ஹசி 95 ஓட்டங்களையும், பொன்டிங் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் லக்மல், ஹேரத் தலா 3 விக்கெட்டுக்களையும், ரண்டீவ் 2 விக்கெட்டினையும் வெலஹெதர, டில்சான் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் இரண்டாவது நாளான நேற்று துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணி லியோனின் பந்தில் சிக்கி முதலாவது இன்னிங்சில் 105 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பரணவிதான 20, சமரவீர 26, ஜெயவர்த்தன11, சங்கக்கார 10ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் லியோன் தனது கன்னி டெஸ்ட் இன் னிங்சில் 15 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் வோட்சன் 3விக்கெட்டுகளையும் ஹேப்லான்ட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



இந்நிலையில் முதலாவது இன்னிங்சில் 168 ஓட்டங்களால் முன்னிலை வகித்த அவுஸ்ரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 6விக்கெட்டுக்களையிழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 60 ஓட்டங்களையும் ஹூக்ஸ் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரங்கன ஹேரத் 3விக்கெட்டுக்களையும், லக்மல், வெலஹெதர, டில்சான் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 283 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

இதேவேளை நேற்றைய இரண்டாம் ஆட்டத்தில் மொத்தம் 16 விக்கெட்டுக்கள்(இலங்கை-10, அவுஸ்ரேலியா-6) வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கு மக்கள் நடுங்கி வாழும் நிலையில்!

## வரதராஜப்பெருமாள் அறிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பூராவும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மர்ம மனிதர்கள் பற்றிய பயத்தில் மக்கள் ஒவ்வொரு இரவும் பயந்து நடுங்கி வாழ வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இரவில் ஆண்கள் நித்திரை முழித்து தமது பெண்டிர், பிள்ளைகளை பாதுகாப்பதில் ஈடுபட வேண்டியுள்ளது.

பெண்கள் எந்த நேரத்தில் மர்ம மனிதர்கள் தங்கள் வீடுகளுக்கும் வந்து விடுவார்களோ என்று பயந்து பயந்தே இரவுகளைக்கழிக்க வேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். மர்ம மனிதர்கள் பயத்தில் இரவு நித்திரை முழிப்பதனால் அடுத்த நாள் அவர்கள் தமது வேலைகளை ஒழுங்காக செய்ய ம்டியாது உள்ளனர்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரான வரதராஜப்பெருமாள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குழந்தைகள், சிறுவர்கள் இரவு முழுவதும் தமது பெற்றோர்களை கட்டிப்பிடித்தப்படி பயத்தில் உறைந்தபடி உள்ளனர். அவர்கள் இரவு நேரங்களில் தமது படிப்புக்களை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

இந்த நிலைமையானது வடக்கு கிழக்கின் மக்கள் சமூகம் முழுவதையும் உளவியல் ரீதியாக வாட்டி வதைக்கும் ஒரு கொடூரமாக இங்கு நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

இதனை பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் வதந்தி என்று கூறுவதில் அர்த்தமில்லை. பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரை பல்வேறு இடங்களில் இரவு நேரங்களில் மர்மமாக நடமாடிய மனிதர்களை மக்கள் துரத்திய சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன.

அவர்களில் சிலர் அரச படைகளின் முகாம்களுக்குள்ளேயே ஓடி மறைந்திருக்கிறார்கள். அத்துடன் இவை தொடர்பாக இந்த அரச அதிகாரிகள் விடுக்கும் அறிக்கைகளும் சேர்ந்து இந்த மர்ம மனிதர்களின் நடமாட்டத்திற்கும் அரச படைகளின் அதிகாரத்திற்கும் இடையே திட்டமிட்ட தொடர்பு இருப்பதாக மக்கள் உறுதியாக நம்புவதற்கே வழிவகுத்திருக்கிறது.

இந்த மர்ம மனிதன் விவகாரம் மேலும் தொடருமாக இருந்தால் பலர் இதனால் ஆபத்தான உளவியல் நோய்களுக்கு உள்ளாக்கப்படும் நிலையே ஏற்படும். இரவு நேரங்களில் ஆண்கள் தமது வீடுகளை விட்டுவேறு இடங்களுக்கு செல்ல முடியாதுள்ளது. மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இரவுகள் தோறும் நித்திரை முழிப்பதினால் ஏற்படும் பலவீனங்களுக்கும் நோய்களுக்கும் பலர் உள்ளாக நேரிடும்.

இந்த மர்ம மனிதர்கள் பற்றிய சம்பவங்களினால் மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த கொஞ்ச நெஞ்ச நம்பிக்கையையும் இப்போது இழந்து போயுள்ளனர். அரசாங்கம் இந்த சம்பவங்களை வேண்டும் என்றே திட்டமிட்டு ஏதோ ஒரு குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செய்கிறது என்றே பரவலாக மக்கள் நம்புகிறார்கள் எனவே ஜனாதிபதியும் மற்றும் அமைச்சர்களும் இந்த விடயத்தில் உடனடியாக அக்கறையெடுத்து உரிய நடவடிக்கையை மேற்கொண்டு மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு படைகள் மீதும் பொலிஸார் மீதும் நம்பிக்கைகள் ஏற்பட வழிவகுக்க வேண்டும் என்றார். (ச-5)

# இந்து ஆலயங்களுக்குப் பதிலாக பௌத்த விகாரைகள் நிர்மாணிப்பு

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யுத்தத்தால் அழிவடைந்த அல்லது சேதமடைந்த இந்து ஆலயங்களை புனரமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்காமல் அதற்கு பதிலாக பௌத்த விகாரைகளை அவ்விடங்களில் நிர்மாணிக்கிறது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் இந்தியாவில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் ராஜபாளையத்தில் அவர் இவ்வாறு கூறியதாக பி.ரி.ஐ. செய்திச்சேவை தெரிவித்துள்ளது. இது வரை 1400 இந்து ஆலயங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள யோகேஸ்வரன் எம்.பி. ஆலயங்கள் அழிக்கப்படுவது தமிழ் மக்களின் கலாசாரத்திற்கு அச்சுறுத்தலாகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தமிழ்மக்கள்வசிக்கும்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் நிதி வழங்கியுள்ளது எனவும் ஆனால் இலங்கை அரசாங்கம் இதுவரை ஆயிரம் வீடுகளைக் கூட நிர்மாணிக்கவில்லை எனவும் யோகேஸ்வரன் எம்.பி. தெரிவித்துள்ளார். தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவதற்காக ராஜீவ் காந்தி-ஜே.ஆர் ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (எ-5)




தங்கமான உறவு
இப்பொழுது புதிய பொலிவுடன்.
கன்னிஹா
ஜுவல்ஸ்

காலங்கள் மாறலாம்! அது போலவே நாமும் புதிய பழக்க வழக்கங்கள், அனுபவங்கள்,
அங்கிகாரங்கள், பொறுப்புகள், இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்
இருப்பினும் இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
ஒரு சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.

ஒன்று மட்டும் என்றுமே
மாறாது.....

Kanniha
JEWELS

காலம்:
02.09.2011 வெள்ளி
நேரம்:
காலை 9.15 - 10.15

99E கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021.222.4448

## மன்மோ...

பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதும் இம்மனுவிலுள்ள மற்றொரு முக்கிய கோரிக்கையாகும். வடக்கு கிழக்கில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் உள்ளன. சாதாரண சூழலில் இப்பகுதிகளில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதற்கு பதில் எதுவும் கிடைத்ததா என வினவப்பட்டபோது இதுவரை நாம் எதையும் அவர்களிடமிருந்து அறியவில்லை என அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் குறித்து அவர் கூறுகையில், எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தின் பதிலுக்கு காத்திருக்கிறோம் என்றார். (ஏ-5)

## மர்ம...

முன்தினம் மாலை 5 மணியளவில் மடக்கிப் பிடித்தனர்.

பொதுமக்களினால் பிடிக்கப்பட்ட நபரை கோப்பாய் பொலிஸார் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா, குறித்த நபரை 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு குறித்த நபரை மன நிலை வைத்திய நிபுணரிடம் சிகிச்சைக்குட்படுத்தும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நபர் காவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ரீ.டி. தனஞ்சே (வயது 20) என விசாரணைக்கு கொண்டுவந்த பொலிஸார் தெரிவித்தனர். (ச-6)

## கொக்கு...

பேருந்தை கல்லினால் எறிந்து சேதப்படுத்தியுள்ளதுடன் பேருந்தில் ஏறி சோதித்தும் உள்ளனர்.

இந்த சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அதே இடத்தை சேர்ந்த 15 ற்கு மேற்பட்ட இளைஞர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸார் நேற்று விசாரணைக்குட்படுத்தியதோடு 6 பேரை தடுத்து வைத்துவிட்டு ஏனையோரை பொலிஸ் நிலையத்தில் வைத்து விடுதலை செய்தனர்.

பொலிஸ் தடுத்து வைத்திருந்த 6 பேரும் நேற்று மாலை யாழ். நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரித்த நீதவான்75 ஆயிரம் ரூபா அபராதத்துடன்ஆறுபேரையும்விடுதலைசெய்தார்.

இதேவேளை பொலிஸாரினால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பின்பு அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மோட்டார் சைக்கிளில் வந்து அப்பகுதியிலுள்ள இளைஞர்களை வீதியில் வைத்து சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் பலர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-6)

NIRUTUITION CENTRE
KONDAVIL
O/L 2011
கடந்த 5 வருட கால வினா விடை வகுப்புகள் ஆரம்பம்.

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL


No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

## குடாநாட்டில் ஒரே இரவில்...

யாழ்.குடாநாட்டில் நேற்றிரவு பல இடங்களில் கிறீஸ் மனிதன் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக குறிப்பிட்ட ஒரே நேரத்தில் கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர் புகுந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் குருநகர், சுழிபுரம், சுன்னாகம், கொக்குவில் முதலி ஒழுங்கை, ஆனைக்கோட்டை, கந்தர்மடம் மணல்தறை லேன் ஆகிய இடங்களில் கிறீஸ் மனிதன் சென்று புகுந்துள்ளான்.

**குருநகரில் இராணுவம் குவிப்பு**

குருநகரில் நேற்றிரவு மர்ம மனிதன் என சந்தேகிக்கப்படுவோரை அப்பகுதி மக்கள் கைது செய்தபோது அவர்கள் தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து பொது மக்கள் அனைவரும் இந்நபரை துரத்திச் சென்றபோது அங்கு திடீரென வந்த இராணுவத்தினர் பொதுமக்களை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நாவாந்துறையில் நடைபெற்றது போன்று பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீடுகளுக்குள் புகுந்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனால் இரவு மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். எனினும் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் குருநகரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் எதுவும் தெரியவரவில்லை.

**கொக்குவில் முதலி ஒழுங்கை**

கொக்குவில் முதலி ஒழுங்கைக்குள் உள்ள வீடொன்றிக்குள் கிறீஸ் மனிதன் புகுந்துள்ளான். எனினும் அவர்கள் கூச்சலிட்டபோது அவன் தப்பி ஓடிவிட்டான். இதனையடுத்து இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

**சுன்னாகம்**

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள வீட்டு முற்றத்துக்குள் சென்ற கிறீஸ் மனிதனை அங்கிருந்தவர்கள் கண்டவுடன் ஓட்டம் எடுத்துள்ளான்.

இதனையடுத்து அப்பகுதி இளைஞர்கள் துரத்திச் சென்றுள்ளனர். எனினும் கிறீஸ் மனிதன் தப்பிச் சென்றுள்ளான். இதனையடுத்து இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு வந்து வானை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்து பொதுமக்களைத் துரத்தியுள்ளனர்.

இதனையடுத்து இளைஞர் யுவதிகள் வீட்டுக்குள் முடங்கினர். இதே போன்று ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடி, கந்தர்மடம் மணல்தறை லேன், சுழிபுரம் போன்ற இடங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. (ச-5)

## பெண்...

கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயப் பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த மேற்படி மர்ம நபரை மடக்கிப் பிடித்த பிரதேசவாசிகள் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்த நிலையிலேயே பொலிஸார் குறித்த நபர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## யாழ்.கல்...

யாற்றி வந்துள்ளதுடன் யுத்த காலத்தில் வடமராட்சி கிழக்கு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக வடமராட்சி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, தீவகம் மற்றும் தென்மராட்சி கல்விப் பணிப்பாளர்களுக்கும் விரைவில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

D.C.M
புதியதோர் உலகம் செய்வோம்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
கணக்கீடு - A.P.பகீரதன் (B.B.A Fm.Spl)

| A/L - 2013 | A/L - 2012 |
|---|---|
| தனிவியாபார முடிவுக்கணக்கு Sat,Sun 7-8 am | பங்குடமை Sat,Sun 8-9 am |
| வங்கி இணக்க கூற்று Sat,Sun 9-10 am | நிறைவில்பதிவுகள் Sat,Sun 11-12 am |

ஆரம்பம் 3 - 9 - 2011 Sat

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவபாக்கியம்



இடைப்பிட்டி காரைநகரைச் சேர்ந்த கோணமலை, அம்பலவாணர், ஆறுமுகம் மனைவி சிவபாக்கியம் அவர்கள் நேற்று 01.09.2011 சிவபதம் அடைந்தார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இடைப்பிட்டி,
காரைநகர். (C-4285)

தகவல்:
ஆ.சுப்பிரமணியம் (மகன்)

புதியதோர் உலகம் செய்வோம்
மாணவர்களின் தொகையல்ல எமது இலக்கு.
அவர்களின் தரமே எமது தாரக மந்திரம்.
D.C.M கல்வி நிறுவனம்
1ம் குறுக்குத் தெரு, யாழ்நகர்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L 2012, 2013 கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | புவியியல் | குமரன் |
| கணக்கீடு | பகீரதன் | தமிழ் | சந்திரலிங்கம் |
| வணிகக் கல்வி | முரளி | இந்துநாகரீகம் | ஸ்ரீநீஸ் |
| அரசியல் | சுகாஸ் | வரலாறு | ஆனந்தன் |
| அளவையியல் | துரை | நாட. அரங்கியலும் | ரமேஸ் |

ஆரம்பம் 3 - 9 - 2011 சனி
காலை நேர, மாலை நேர, வார இறுதிநாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 05.09.2011
வார வகுப்பு ( திங்கள், புதன், வெள்ளி ) - 1 மாதம்
பிரிவு 1 : காலை 8.00 - 9.30 பிரிவு 2 : காலை 9.30 - 11.00
பிரிவு 3 : மாலை 3.00 - 4.30 பிரிவு 4 : மாலை 4.30 - 6.00
சனி, ஞாயிறு வகுப்பு - 3 மாதம்
பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00
இதுவரை MyWay பயிற்சியினை பூர்த்தி செய்த அனைவருக்கும் 04.09.2011 ஞாயிற்றுக்கிழமை பயிற்சிப்பூர்த்திக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி
உலகில் எந்தவொரு குழந்தையும் முதலில் படித்துவிட்டு தன் தாய் மொழியைப் பேசப் பழகுவதில்லை. மாறாக பிறர் பேசுவதை அவதானித்தே அதுபோல தானும் சுயமாக வசனங்களை உருவாக்கி பேசப்பழகுகிறது.
புத்தகத்தைப் படித்தலோ, மனப்பாடம் செய்தலோ or இலக்கணத்தைக் கற்றலோ ஆங்கிலத்தில் பேச முடியாத நிலைமையினையே ஏற்படுத்தும். ஒரு மொழி பேசப்படுகின்ற சூழலில் இருந்தால் மட்டுமே உங்களாலும் அம் மொழியைப் பேசிப்பழக முடியும்.
10 வருடங்களுக்கும் மேலான எமது ஆங்கில மொழிப்பயிற்சி பற்றிய ஆய்வில் மாணவர்களை நேரடியாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் தன்னியல்பாகவே அவர்கள் எந்தவொரு வசனத்தினையும் உருவாக்கி, ஏனையவர்களுடன் பேசமுடிவதை நாம் நிரூபித்துள்ளோம்! நீங்களும் இம் 3 மாத பயிற்சியில் இணைய விரும்புகிறீர்களா?
பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் வெளிநாடு செல்ல விரும்புவோர் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட எவரும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவு செய்ய வேண்டிய இறுதி திகதி: 06/09/2011
சனி, ஞாயிறு பிரிவுகள்
காலை 08-09, 09-10, 10-11, 11-12
மாலை 01-02, 02-03, 03-04, 04-05.
(ஒரு பிரிவில் 16 பேருக்கு மட்டுமே அனுமதி)
பயிற்சிக் கட்டணம் 3000.00
(C-4283)
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்.
TEL: 0776214567

வேலையாட்கள் தேவை
புடைவை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் 02 பெண்பிள்ளைகள் மற்றும் ஆண் (45 வயதிற்குட்பட்டவர்) உடன் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
வேலை நேரம்:-
காலை 9.00- 6.00 மணிவரை.
தொடர்புக்கு:-
லைடன் புடைவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-4264) T.P:- 0212222381

After A/L? CIMA-UK Per Level Rs.14,400 | Engineering-USA 80% off | BIT University of Colombo Per year Rs.20,000 | Multimedia USA 80% off
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்

Government Schol.
MCS 324, Palaly Road, Campus Junction, Jaffna.
Supported By UNDP/JRRP
Diploma Courses.. Free Course fee* MsOffice, AutoCAD, Web Designing *Hardware *Accounting *DTP *English,
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி, சதுரங்கம், ஆங்கிலம், Games
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.